விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை (04.12.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 350

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-2865)

## தகவல் உரிமை அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சென்னை மக்களுக்கு ஜனாதிபதி அனுதாபம்

(கொழும்பு)

இந்தியாவின் தமிழகம் மற்றும் சென்னையில் பெய்துவரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள் ளப் பெருக்கால் பாதிப்புக்கு உள் ளாகியிருக்கும் மக்களுக்கு தன் னுடைய ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு இந்தக் கடினமான சந்தர்ப்பத்தில் தாமும் அவர்களுடைய துயரத்தில் பங்கு கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய

23ஆம் பக்கம் பார்க்க....

## 4 பசுக்கள் நசுங்கிப் பலி

## மிரட்டும் வானிலை

# மூழ்கியது சென்னை

### 300 பேர் பலி



04ஆம் பக்கம் பார்க்க....

## பரீட்சை எழுதும் 13 தமிழ் கைதிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகள் 13 பேர் இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரணத்தர பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

சிறைக்கைதிகள் 20 பேர் இம்முறை பரீட்சையில் தோற்றவுள்ளதாகவும் அவர்களில் 13 பேர் தமிழ் அரசியல் கைதிகள் எனவும் சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தாவின் மனு நேற்று நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முன் வைத்த அடிப்படை உரிமை மீறல் குறித்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பாரிய மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு குறித்த மனுவை நிராகரித்துள்ளது.

ரக்னா லங்கா நிறுவனம் குறித்து வாக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

# மண்டைதீவில்

(கொழும்பு)

போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்று வீதியில் படுத்திருந்த மாடுகள் மீது மோதியதல் நான்கு பசு மாடுகள் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன.

இச்சம்பவம் நேற்று காலை யாழ்.பொம்மை வெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மேற்படி ஓட்டு மடம் பகுதியினூடாக பேருந்து சேவையி

23ஆம் பக்கம் பார்க்க....

# மனித புதைகுழி!

## அகழ்வுக்கு உட்படுத்துமாறு கோரி சிறிதரன் எம்.பி சபையில் வலியுறுத்து

(கொழும்பு)

காணாமல் போன இளைஞர்கள் பலரின் சடலங்கள் மண்டைதீவு கிணறுகளிலும், அங்குள்ள தேவாலய வளாகத்திலும் புதைக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்றில் தகவல் வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குறித்த பகுதியை விரைவில் அகழ்வுக்கு உட்படுத்தி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - கிளி. ஒருங்கிணைப்பு குழு தலைவராக விஜயகலா நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்தி, ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான கடிதத்தினை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இராஜாங்க அமைச்சருக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## இலஞ்சம்; ஊழல் விழிப்புணர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ்.நகரில் இன்றையதினம் மக்கள் செயற்திட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதற்கு இலஞ்ச ஊழல் எதிர்ப்பு குழுவின் ஆணையாளர் நாயகம் டயஸ் விக்ரமசிங்க, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## டெங்குக்காய்ச்சல், வயிற்றோட்டம் எலிக்காய்ச்சல், உண்ணிக்காய்ச்சல்

### தொற்று நோய்கள் பரவுவதாக எச்சரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழில் டெங்கு காய்ச்சல் (Dengue), வயிற்றோட்டம் (Dysentery) எலிக்காய்ச்சல் (Leptospirosis) மற்றும் உண்ணிக்காய்ச்சல் (Typhus) ஆகிய தொற்று நோய்கள் அதிகரித்து வருவதாக எச்சரித்துள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சத்தியமூர்த்தி, இவை தொடர்பில் சுகாதார பிரிவினரால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## எம் வருங்காலத்தை உணர்ந்து சில்லறைத்தனத்தை தவிருங்கள்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவுறுத்து



(கொழும்பு)

தமிழினத்தின் தற்போதைய நிலை, அதன் வருங்காலம் பற்றிச் சிந்தித்தால் எமக்குரிய பொறுப்புணர்ச்சி தானே வந்து விடும் என சுட்டிக்காட்டிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஒருவர் ஒன்றைச் செய்தால் அதிலும் இருமடங்காக நாங்கள் செய்து காட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அரசியல் கைதிகளை உடனடியாக விடுவியுங்கள்

## சபையில் சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின், குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் ஏன் மறுக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமலுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு மைத்திரி, ரணில் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பாராட்டத்தக்கது.

ஆனால், உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் அரசாங்கம் உடனடியாக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைச் செய்ய வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரும் வலியுறுத்தியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (செ-12)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள்கேள்வி அறிவித்தல் - 2016

யாழ்.மாநகரசபையினால், 04.11.2015 ஆம் திகதியபத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்குஅமைவாக, இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படிகடைகள் 01.01.2016 ஆம் திகதிமுதல் 31.12.2016 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்குவழங்குவதற்கானஅரக்குமுத்திரையிடப்பட்டகேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப்படிவக்கட்டணம்** - ரூபா 500.00 (VAT, NBTநீங்கலாக)
**கேள்விப்படிவம் விநியோகித்தல்** - 04.12.2015 - 15.12.2015 நண்பகல் 12.00 மணிவரை
**கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** - 16.12.2015 மு.ப 9.30மணிவரை
**கேள்வி திறத்தல்** - 16.12.2015 மு.ப. 10.00 மணிக்கு

### மாநகரசபை யாழ்ப்பாணம் மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ இல | விபரம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விபிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (11% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,83,000.00 |
| 02 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 2,20,400.00 |
| 03 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 75,000.00 |
| 04 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 82,000.00 |
| 05 | செங்குந்தாஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,43,450.00 |
| 06 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 5,14,900.00 |
| 07 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 97,565.00 |
| 08 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 3,32,500.00 |
| 09 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 3,05,000.00 |
| 10 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 2,51,750.00 |
| 11 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 3,80,000.00 |
| 12 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 2,24,200.00 |
| 13 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 2,37,500.00 |
| 14 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 2,00,000.00 |
| 15 | நாவாந்துறைமாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 2,34,650.00 |
| 16 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 63,080.00 |
| 17 | நாவாந்துறைகருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,825.00 |
| 18 | பண்ணைமீன் சந்தை | | 10,000.00 | 32,90,000.00 |
| 19 | செங்குந்தாசந்தை | | 10,000.00 | 16,15,000.00 |
| 20 | நாவாந்துறைமீன்சந்தை | | 10,000.00 | 5,76,650.00 |
| 21 | அரியாலைமீன்சந்தை | | 1,000.00 | 57,950.00 |
| 22 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 3,80,000.00 |
| 23 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்தில உள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 69,350.00 |
| 24 | புங்கன் குளம் சந்தை | | 2,000.00 | 9,025.00 |
| 25 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகன தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 49,875.00 |
| 26 | யாழ் கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 2,50,000.00 |
| 27 | யாழ். முஸ்லீம் கல்லூரிவீதியில் அமைந்துள்ளசந்தைகட்டிடத் தொகுதி - மேல் தளம் 8 கடைகள் (விடுதி, இறைச்சி, மீன் வகை தவிர்ந்த ஏனையவை) | | 10,000.00 | 1,82.400.00 |
| 28 | முனிஸ்வரன் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (வீரசிங்கம் மண்டபம் அருகாமை) | | 2,000.00 | 2,00,000.00 |
| 29 | மின்சாரநிலையவீதி மலசலகூடம | | 2,000.00 | 1,09,250.00 |

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
03.12.2015

(சி-2870)

பொ.வாகீசன்
ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை.


சேவைநலன் பாராட்டு

திரு. கந்தன் குணம்



எமது கல்லூரியில்
25 வருடங்கள்
கணித ஆசிரியராகவும்
03 வருடங்கள்
பிரதி அதிபராகவும்
சிறப்பாகக் கடமையாற்றி
30.07.2015 அன்று
ஓய்வு பெற்ற
மதிப்பிற்குரிய
ஆசிரியர்
திரு.கந்தன் குணம்
அவர்கள்
தன்னலம் கருதாது
எமது கல்லூரியில்
நீண்ட காலம் ஆற்றிய
சேவைக்காக
அவரைப் பாராட்டி
வாழ்த்துவதோடு
ஓய்வுக்காலத்தில் அவர்
மகிழ்வாகவும்
நலமாகவும்
வாழ எல்லாம்வல்ல
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.


ஆசிரிய நலன்புரிச் சங்கம்
யா/ வட்டு இந்துக் கல்லூரி
சித்தன்கேணி

(2664)

வாழ்க வளமுடன்.
நன்றி.



கண்ணீர் அஞ்சலி



திருமதி அனுதமா ஜெய்ராம்

தலைவர் ரூலின்ஸ் நிறுவனம்.
இயக்குனர் சபை உறுப்பினர்
உருத்திரா கட்டிடக் கலை நிறுவனம்

காற்றோடு வந்த செய்தி
கலங்கடித்த தெம்மையன்றோ
நேற்றோடு உமைக் காணும்
காலமும் கடந்ததன்றோ
பகட்டில்லா வாழ்வாலே
பண்பான செயலாலே
கட்டி வைத்தீர் எம்மையன்றோ
காலன் செயல் கொடுமையன்றோ
நீர் செய்த செயல் யாவும்
நீங்காது எம்மோடு
எப்போதும் பயணிக்கும்

(2665)

இயக்குனர்கள்
ஊழியர்கள்,
ரூலின்ஸ் நிறுவனம்
உருத்திரா நிறுவனம்

# வைத்தியர்கள் பகிஷ்கரிப்பு; நோயாளர்கள் பெரும் அவதி

## யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தகவல்

**(யாழ்ப்பாணம்)**

**அரச வைத்தியர்கள் நேற்றைய தினம் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள்பெரும்பாதிப்பினை எதிர்நோக்கி இருந்ததாக யழ்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

வரிச்சலுகை உள்ள வாகன இறக்குமதி இரத்து செய்யப்பட்டமை, வாக்குறுதி அளித்தபடி அடிப்படை சம்பள திருத்தம் பத்து வருடங்களாக செய்யப்படாமை, தரப்படும் அலவன்ஸ் வரி அறவிடப்படுவது போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் நேற்றைய தினம் ஒருநாள் முழு நேர பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தியிடம் நேற்றைய தினம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அரச வைத்திய அதிகாரிகள் இன்றைய தினம் "நேற்று" பல கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



இப்போராட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப் பணிப்புறக்கணிப்பினால் அவசர பிரிவு தவிர்ந்த அனைத்து பிரிவுகளும் செயலிழந்து காணப்படுகின்றன.

வெளிநோயாளர் பிரிவு உட்பட பெரும்பாலான மருத்துவ சிகிச்சை பிரிவுகளுக்கு வைத்தியர்கள் செல்லாமையால் சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள் காத்திருந்து திரும்பி செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. குறிப்பாக வெளிநோயாளர் பிரிவு நோயாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் நோயாளர்களின் அவசர நிலையை கருத்தில் கொண்டு சில அவசர பிரிவு உட்பட்ட சில பிரிவுகள் செயற்பட்டன. விடுதிகளுக்கான சிகிச்சையளிப்புக்கள் மற்றும் மருந்து வழங்கல் என்பன நடைபெற்றன என்றார்.

இதே வேளை வைத்தியர்களின் நேற்றைய பணிப்புறக்கணிப்பினால் வைத்தியசாலை முற்றாக ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டதோடு, வெளிநோயாளர் சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்களில் பெரும்பாலான நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றிருந்ததனையும் காண முடிந்தது. (இ-4)

## வீதியில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுங்கள்

(யாழ்ப்பாணம்)

இராசாவின் தோட்ட வீதியில் கடலுணவுக் கழிவுகள் கொட்டப்படுவதால் அவ் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


வீதியின் இரு மருங்கிலும் கடலுணவுக் கழிவுகள் கொட்டப்படுவதனால் துர்நாற்றம் வீசுகின்றது.

மழை காலத்தில் குறித்த வீதியில் அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டிவரும் நிலையில் இக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன.

யாழ். நகரை அண்மித்த பிரதான வீதிகளில் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே வீதிகளில் போடப்பட்டுள்ள கழிவுகளை உடன் அகற்றி மக்களின் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை களைய வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-10)

## சஜின் வாஸின் கோரிக்கை நிராகரிப்பு



வெளிநாடு செல்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன விடுத்தகோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இந்தக்கோரிக்கையை நேற்று நிராகரித்துள்ளது

ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு முன்னர் மருத்துவ சிகிச்சைக்காக மாத்திரம் சிங்கப்பூர் சென்று வருவதற்கு அவருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிட்டத்தக்கது.

ஜனாதிபதி செயலகத்தின் வாகன முறைகேடுகள் தொடர்பில் வாஸ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட நிலையில் பிணையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மின்னல் தாக்கி இருவர் பலி!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் சியம்பலாண்டுவ -தெமட்டஎல்ல பிரதேசத்தில் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி இருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேனைப் பயிர் செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே நேற்று மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் பலியானவர்கள் 30 வயதையுடைய கொன்கஸ்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மேலும் இச்சம்பவத்தில் காயமடைந்த இருவர் சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மழை வெள்ளத்தில் தத்தளித்த 20ஆயிரம் பேர் மீட்கப்பட்டனர்

சென்னையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் தொடர் கனமழையால் வெள்ளத்தில் தத்தளித்த சுமார் 20 ஆயிரம் பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் ஆகிய கடலோர மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் முக்கிய சாலைகள் தண்ணீரில் மூழ்கியதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மத்திய அரசின் தேசிய பேரிடர் மீட்பு படையினரும், தமிழக அரசின் சார்பில் மீட்புக் குழுவினரும் தீவிர மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் நேற்று ஒரே நாளில் மட்டும் சுமார் 20 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். (இ-7-10)

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 14 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஆர். சபேசன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 18 ஆம் திகதி இரவு 3 படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களையும் காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். நேற்றைய தினம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-9)

## 'செய்வோம் செய்விப்போம்' மாகாண கண்காட்சி ஆரம்பம்







வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் "செய்வோம் செய்விப்போம்" எனும் தொனிப்பொருளில் மாகாணக் கண்காட்சி நேற்றைய தினம் யாழ். நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

இக் கண்காட்சியை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்ததுடன் உற்பத்திகளில் சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களை கௌரவித்ததுடன் சிறப்பு தேர்சி பெறவைத்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு மடிக்கணனிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வட மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், முதலமைச்சரின் செயலாளர் எஸ்.வரதீஸ வரன்மற்றும்கிராம அபிவிருத்திதிணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியாகள, மாணவர்கள்பலர்கலந்து கொணடனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் இந்திய அணி சிறப்பாட்டம்

ரகானேயின் அரைச் சதத்தின் உதவியுடன் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்டின் முதல்நாள் முடிவில் இந்திய அணி சிறப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியா, தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி டெல்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நேற்று தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த இந்திய அணி சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்தது.

தொடக்க வீரர்களான முரளி விஜய் 12 ரன்களில் ஆட்டமிழந்தார். மிகவும் நிதானமாக ஆடிய ஷிகர் தவான் 33 ரன்களில் விக்கெட்டை இழந்தார். கப்டன் விராட் ஹோலி 44 ரன்கள் சேர்த்தார். ரோகித் சர்மா, சகா இருவரும் தலா ஒரு ரன்னும், ஜடேஜா 24 ரன்களும் எடுத்தனர்.



அதேசமயம் 5ஆவது வீரராக களமிறங்கிய ரகானே பொறுப்புடன் விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டார். 91 பந்துகளில் அரை சதம் (உள்ளூர் மைதானத்தில் முதல் அரை சதம்) கடந்த அவர் ஆட்டநேர முடியும் வரை களத்தில் இருந்தார். ஆட்ட நேர முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 7 விக்கெட் இழப்பிற்கு 231 ரன்கள் சேர்த்தது. ரகானே 89 ரன்களுடனும், அஷ்வின் 24 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

தென்னாபிரிக்கா தரப்பில் டேன் பீடிட் 4 விக்கெட்டுகளும், அப்போட் 3 விக்கெட்டுகளும் கைப்பற்றினர். இன்று இரண்டாவது நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது. (க)

## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### கூறுவிலை கோரல்

வரணி வடிசாலையில் பொருத்தப்பட்டிருக்கும் பானை முறையிலான வடிகலன் தொகுதியை திருத்தம் செய்து கொள்வதற்காக பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் பொறியியலாளர்களை (இத்துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்) தெரிவு செய்து கொள்வதற்கான கூறுவிலை கோரப்படுகிறது. இக் கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்பும் தொழில் நுட்பவியலாளர்கள் அலுவலக நாட்களில் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட வேலைகளை செய்வதற் கான பெறுமதியை தலைவர் தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி வரணி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 15-12-2015 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(C-2867) தலைவர் (க.துரைசிங்கம்)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- இலங்கையில் **FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **AF** மட்டுமே.
- **136** நாடுகளில் **1092** கிளைகள். தலைமை நிறுவனம் **1883 PARIS** இல் நிறுவப்பட்டது
- ஆசிரியர்கள்: பிரான்ஸ்நாட்டு நிபுநர்களால் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்கள், யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்,பிரான்ஸ்நாட்டவர்...இலங்கையில் **AF** ஆசிரியர்களே சர்வதேச பரீட்சையை **(DELF,DALF)** நடத்துகிறார்கள்
- இலங்கையில் **AF** மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1,A2)**ஐ வழங்குகிறது. எமது **A1** சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்றவேண்டியதில்லை.
- இலவசம்: படிக்கும் பாடங்களின் **PHOTOCOPIES,** படித்ததற்கான **LETTRE, VISA FORM** நிரப்புதல், **CD, BOOKS** பாவனை...
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் **AF**இல் படித்தே **FRANCE, CANADA, SWITZERLAND...** செல்கிறார்கள்.
- பிரெஞ் மொழிபெயர்ப்புகள். மாணவர்களுக்கு கட்டணம் குறைவு

ஆரம்பம் சில தினங்களில். பதிவுகளுக்கு முந்துங்கள்

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (2660)

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → **AF**(வெள்ளை மாடிக்கட்டடம்)


## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி சிவலிங்கம்

**தோற்றம் : 1942-04-09** **மறைவு : 2015-12-03**



யாழ்ப்பாணம் அச்சுவேலியை பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையையும், வவுனியா குட்செட் வீதியை வதிவிடமாகவும் கொண்ட **கண்மணி சிவலிங்கம்** 03/12/2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் வள்ளியம்மை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சிவலிங்கம் ஆசிரியரின் அன்பு மனைவியும், கலையரசி (பிரதேச செயலகம்-தெல்லிப்பளை), சிந்தனைச்செல்வன் (கொ/விவேகானந்தாக் கல்லூரி- கொழும்பு 13), மொழியரசி (பிரதேச தபால் அத்தியட்சகர் காரியாலயம்-வவுனியா), திருவருட்செல்வன் (வ/விபுலானந்தாக் கல்லூரி, பண்டாரிகுளம் வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நற்குணசிங்கம் (யாழ்/இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்), ஸ்ரீகௌரி (Lake land inter American School இரத்மலானை), நிமால் (வனபரிபாலனத் திணைக்களம்- வவுனியா), நித்தியா (வ/வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், டினேஸ், அஜித், தனுஷா (வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) கலியுகன் (யாழ்/மகாஜனக் கல்லூரி), ஸ்ரீ மாதுரி (கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி கொழும்பு-04), ஸ்ரீ மாதுமை (கொ/ சைவமங்கையற்கழகம் கொழும்பு-06) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04/12/2015 இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை வீதி, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் தெல்லிப்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-குடும்பத்தினர், பிள்ளைகள்.

**0777 550332** (C-2873)

# மூழ்கியது சென்னை...

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்தம் அடுத்தடுத்து உருவாகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட கடும் மழையால் தமிழகத்தின் தலைநகர் சென்னை முழுமையாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

இவ் வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டு இதுவரை 300பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்து வருவதால் சென்னை நகர் பகுதி மற்றும் புறநகர் பகுதிகளில் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதனால், கட்டடத் தீவுகளாக சென்னை நகரம் காட்சி அளிக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருப்பிடம், உணவு, அடிப்படை வசதிகளின்றித் தவித்து வருகின்றனர்.

இந்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக சென்னையிலும் புறநகர் பகுதிகளிலும் வசித்து வரும் ஈழத்தமிழ் மக்களும் பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளனர். ஈழத்தமிழர்கள் அதிகளவு வசிக்கும் வளசரவாக்கம், கே.கே.நகர், மடிப்பாக்கம், அண்ணாநகர், திருவான்மியூர், கொட்டிவாக்கம், நெசப்பாக்கம் மற்றும் போரூர் உள்ளிட்ட பகுதிகள் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளது.

போக்குவரத்து, தொலைத்தொடர்பு என அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிப்படைந்துள்ளது.

துரிதமான மீட்புப் பணிகளில் இராணுவம், கடற்படை, விமானப்படை, தீயணைப்பு மற்றும் இடர்மீட்புப் படையினரும் ஈடுபட்டுள்ளதுடன், மத்திய கடற்படை கப்பலுடன் 20 நீச்சல் வீரர்களும் மீட்புப் பணிகளுக்காக சென்னை சென்றடைந்துள்ளனர்.

மழை மற்றும் வெள்ளம் காரணமாக சென்னையின் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீட்பு படையினரை தொடர்பு கொண்டு உதவி பெற முடியாது தவித்து வருகின்றனர். அத்துடன், வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ளவர்களுக்கு வெளியுலகம் உடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பூந்தண்டலம் பாலம் உடைந்ததையடுத்து, சென்னை - புதுச்சேரி மற்றும் சென்னை - திருப்பதி ஆகியவற்றுக்கு இடையேயான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக சென்னை விமான நிலையத்தில் நீர் புகுந்தள்ளதால், அனைத்து விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதோடு, விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழகத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக சென்னை மற்றும் கொழும்புக்கு இடையிலான விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கன மழை காரணமாக பல பகுதிகளில் தொடர்ந்து மழைநீர் தேங்கியுள்ளது. மழைநீருடன் கழிவுநீரும் கலந்துள்ளது. இதனால் டெங்கு உள்ளிட்ட பல நோய்கள் பரவும் அபாய நிலையையும் சந்திக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக இந்தியாவின் தினசரி ஆங்கிலப் பத்திரிகையான தி ஹிந்து 137 ஆண்டுகளில் முதல் முறையாக நேற்று முன்தினம் வெளிவரவில்லை.

அத்துடன் ஜெயா, மெகா தொலைக்காட்சிகள் மற்றும் புதிய தலைமுறை தொலைக்காட்சி நிலையங்களுக்கு உள்ளேயும் வெள்ளம் புகுந்துள்ளதால் தொலைக்காட்சி சேவைகள் நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 269 பேர் உயிரிழந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் லோக்சபாவில் நேற்றுக்காலை தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்று மாலை வரை கிடைத்த இந்திய ஊடகங்களின் தகவல்படி சுமார் 300 இற்கும் அதிகமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிய் வருகின்றது. (செ-12)

## நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைப்பதற்கான காணியை நன்கொடையாக பெற்றுக் கொள்ளல்

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயக்கும் நல்லூர் சுகாதார் வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்த கட்டிடம் இல்லாத காரணத்தினால் நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கான நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே நிரந்தர கட்டிடம் அமைப்பதற்காக கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, நல்லூர், கல்வியங்காடு ஆகிய இடங்களில் நன்கொடையாக காணி வழங்க விரும்பும் நல்லுள்ளம் கொண்ட கொடையாளர்கள் மூன்று பரப்பு காணியினை நன்கொடையாக வழங்கியுதவுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். நன்கொடையாக காணி வழங்க விரும்புவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**இல. 572/2, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல : 021 222 3725**

(சி-2872)



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் 64 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த மாதாந்த உதவிகளினைப் பெறும் பயனாளிகள் உட்பட புதிதாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அனைவருக்கும் அலுவலகத்தில் வைத்து கொடுப்பனவுகளும் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

## இலங்கையர் கடத்தல்

# ஜப்பானியர்கள் உட்பட இலங்கையர்கள் கைது

இலங்கையர் ஒருவரை கடத்திய குற்றத்துக்காக மூன்று இலங்கையர்களும் நான்கு ஜப்பானியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பான் யோக்காகாமவில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. 28வயதான சாலிஹ் முகமாது என்பவரே கடத்தப்பட்டவராவார்.

கடத்தப்பட்டவரின் சகோதரர் தமக்கு செலுத்த வேண்டிய 3.18 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டிய கடனை. இரண்டு வாரத்துக்குள் செலுத்த வேண்டும் என்று கோரியே ஜப்பானியர் ஒருவரால் இந்த கடத்தல் இடம்பெற்றுள்ளது.

இந்த கடத்தலின்போது அவர் இலங்கையர் சிலரையும் உதவிக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்தநிலையில் குறித்த கடத்தல் குறித்து விசாரணைகள தொடர்கின்றன. (இ-7-10)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியதனால் மகிந்த பட்ஜெட் விவாதத்தில் பங்கேற்கவில்லை



நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு செலவுத் திட்ட விவாதங்களில் பங்கேற்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் என்ற பெயரில் நிதி அமைச்சர் ர்வி கருணாநாயக்க சமர்ப்பித்த ஆவணத்தை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளாது.

வரவு செலவுத் திட்டத்தின் போது கூட்டு எதிர்க்கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என அரசாங்கம் பிரசாரம் செய்து வந்தது.

எனினும், இது சுத்தப் பொய் என்பது நேற்றைய வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது. தெளிவாக அம்பலமாகியது.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

.எனினும் பிழைகளை திருத்திக்கொள்ள இன்னமும் சந்தர்ப்பம் உண்டு.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டாம் என கோரியிருந்தார்.

எனினும் எதிர்வரும் செயற்குழு விவாதங்களின் போது பிழைகளை திருத்திக்கொள்ள அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலேயே வரவு செலவுத திட்டத்திற்கு எதிராக வாக்களித்தோம்என டலஸ அழகப் பெரும தெரி வித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டலஸ் அழகப்பெரும ஆளும் கட்சியில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவி ஒன்றை பொறுப்பேற்பார் என முன்னதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தி இருபாலை வீதியில் ராஜவீதிக்கு அண்மையில் 6 பரப்பு தோட்டக் காணி (சுற்றுமதில் உள்ளது. அருகில் குடியிருப்புக்கள் உள்ளபகுதி) விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொலைபேசி: 077 331 4262

(6634)



ஶ்ரீராம ஜெயம்
சுவாமி மலை சுவாமிநாதர் துணை
பினோனி அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் துணை

## விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்தி ஶ்ரீ நிகழும் மன்மத வருஷம் கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை தசமி திதி, ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுப தினத்தில் உதயாதி நாழிகை 7.30 இற்கு மேல் 11.15 நாழிகைக்குள் காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மகர லக்கினத்தில்

ஸ்வர்கீய இலங்கை ஶ்ரீ ரத்னசபாபதி ஐயரின் பௌத்ரியும், சிவஶ்ரீ நகுலேஸ்வர சிவாச்சியாரின் தௌஹித்ரியும், ஶ்ரீ சுவாமிநாத ஐயரின் சகோதரர் ஶ்ரீ வெங்கட்ராமனின் கனிஷ்ட புத்ரியுமான சௌபாக்கியவதி

**சங்கீதாவை**

கும்பகோணம் ஸ்வர்கீய கிருஷ்ணமூர்த்தி ஐயரின் பௌத்ரனும், சென்னை மாடம்பாக்கம் ஶ்ரீமான் கே.முரளி-ஶ்ரீமதி சித்ராதம்பதியரின் சீமந்த புத்திரனுமான சிரஞ்சீவி

**மணிகண்டன்** அவர்களுக்கு

கன்னிகா தானம் செய்து கொடுப்பதாய் பகவத் க்ருபையால் ஶ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஶ்ரீ ஜகத்குரு ஶ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்கிரஹத்தாலும் கீரிமலை ஶ்ரீ நகுலேஸ்வர சுவாமியின் அனுக்கிரஹத்தாலும் பினோனி அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் ஸ்வாமி அனுக்கிரஹத்தாலும் மேற்படி முகூர்த்தம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு சென்னை, மைலாப்பூர், வெங்கடேஸ்வர அக்ரஹாரத்தில் உள்ள ஶ்ரீ வேதாந்த தேசிகர் கல்யாண மண்டபத்தில் நடக்கிறபடியால் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் குடும்ப ஸகிதம் முன்னதாகவே வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதித்து எங்களையும் கௌரவிக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

ஶ்ரீ R.நடராஜன் - ஶ்ரீமதி N.வசந்தி
ஶ்ரீ R.வெங்கட்ராமன் - ஶ்ரீமதி ரமணி
ஶ்ரீ R.சர்வேஸ்வரன் - ஶ்ரீமதி கீதா
ஶ்ரீ R.ராமமூர்த்தி - ஶ்ரீமதிவித்யா
ஶ்ரீ T.ஜீவநேசன்- ஶ்ரீமதி J.மோகாம்பாள்
ஶ்ரீ V. பிரசன்னா - ஶ்ரீமதி P.சரண்யா

ஶ்ரீ R. சுவாமிநாதன்
ஶ்ரீமதி S.யுகந்தி
0027 842 420 841
(தென்னாபிரிக்கா)

(6832)


## ராசி பலன்

04.12.2015
(கார்த்திகை 18, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.09 மணிக்கு
நவமி முழுவதும்
பூரம் முற்பகல் 11.49 மணிவரை
இராகுகாலம் 10.45-12.15 மணிவரை
சுபநேரம்-6.15-7.45 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம்,அவிட்டம்<br>இரவு 6.23 ற்கு<br>கன்-சந் | | |
| | | | குரு சந் |
| புத | சூரி, சனி | சுக் | ராகு செவ் |

**மீனம்** தொழிலில் முன்னேற்றம் பெற புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், பணவரவு திருப்திதரும் வகையில் அமையும், உற்சாகமான நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்** உங்களின் செயற்பாடுகளில் மதிநுட்பம் நிறைந்திருக்கும், வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள், பயணங்களின் போது இனிய அனுபவங்கள் ஏற்படலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** உறவினர், நண்பர்களிடத்தில் மனம்விட்டுப் பேசுவீர்கள், சுய முயற்சியால் தொழில் வளர்ச்சியுண்டு, பணவரவில் இருந்த தடைகள் விலகும்.

**மிதுனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** தொழிலில் புதிய இலக்கை அடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், இஷ்ட தெய்வ வழிபாடு காரிய வெற்றி தரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, தொழில்வளம் பெருக அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள், செயற்பாடுகளில் நிதானம் தேவை.

**மகரம்** வரவை விட செலவுகள் அதிகமாகும், குடும்பத்தினரிடையே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**தனுசு** தொழிலில் முன்னேற்றம் பெற அதிகம் பாடுபடுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகள் உதயமாகும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** மகிழ்ச்சியான தகவல்கள் உங்களை நாடி வரும், உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் நாள், கௌரவமான நாள்.

**துலாம்** குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக நடந்துகொள்வர், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு செயலிழந்தது

(கரணவாய்)

அரச வைத்தியர்கள் நேற்றைய தினம் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு முற்றாக செயலிழந்தது.

இலங்கை பூராகவுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வைத்தியர்கள் அனைவரும் 3 கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் போராட்டம் ஒன்றில் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.

இந்தவகையில் இப்போராட்டம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை வைத்தியர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வரிச்சலுகை உள்ள வாகன இறக்குமதி இரத்துச் செய்யப்பட்டமை, வாக்குறுதி அளித்தபடி அடிப்படைச் சம்பள திருத்தம் 10 வருடங்களாக செய்யப்படாமை, தரப்படும் அலவன்ஸ் வரி அறவரி அறவிடப்படுவது போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டங்களை முன்வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## வடக்கில் கரவெட்டி முதலாமிடம்

(கரணவாய்)

பிரதேச செயலகங்களுக்கிடையிலான 2014ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் வடக்கு மாகாணத்தில் முதல் நிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-5-60)

## வை.எம்.சி.ஏ.நிறுவனத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்.மாவட்டத்தில் வை.எம். சி.ஏ. நிறுவனத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை வரை பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக வை.எம்.சி.ஏ.நிறுவனத்தின் யாழ்.மாவட்டத் துக்கான தலைவர் ஆர்.வினோத் தெரிவித்துள்ளார்.

யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் முழுவதும் வை.எம். சி.ஏ நிறுவனம் பல்வேறு சமூக தொண்டுப் பணிகளை ஆற்றி வருகின்றது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்திலும் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

எமது நிறுவனத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அந்தவகையில் நாளை சனிக்கிழமை காலை6மணிக்கு வைஎம்.சிஏ யில் இருந்து வீதி ஓட்டமும் மாலை 4மணிக்கு பரியோவான் ஆலயத்தின் நன்றி செலுத்தும் பிரார்த்தனை நிகழ்வும் நடைபெறும்.

எதிர்வரும் 7ஆம் திகதியும் 8ஆம் திகதியும் வை.எம்.சி.ஏக்களுக்கான தேசிய சபைகளின் அனுசரணையுடன் உதைபந்தாட்ட பயிற்சி முகாம் நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்.எம்.சி.ஏ யில் காலை 9மணி தொடக்கம் 12 மணிவரை இரத்ததான்முகாம் நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி வை.எம்.சி.ஏ.மண்டபத்தில்காலை 9மணிக்கு எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபெறும். எதிர்வரும் 12ஆம் திகதி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் பொதுக் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. அக்கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் பல்வேறு நிகழ்வுகளும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கணபதி ஹோமம்

யாழ்.வண்வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹாகணபதி ஹோமம் மற்றும் சதுர்த்தி உற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ-5)




## திலகார்ப்பணம் நிகழ்வு நாளை

கலாபூஷணம் எல்.திலகநாயகம் போலின் 6 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக நல்லூர் சோமராகம் இசைமன்றம் நடத்தும் திலகார்ப்பணம் நிகழ்வு நாளை சனிக்கிழமை ஸ்ரீ.ஸ்ரீ.ராஜவேந்த்ர ஸ்சுவாமிகள் ம்ருத்திகா ப்ருந்தாவனத்தில் பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக சென்ஜோன்ஸ் கல்லூரி ஓய்வு பெற்ற இசை ஆசிரியர் சங்கீத பூஷணம் எஸ்.சிவஞானசேகரம்கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன்கௌரவவிருந்தினராக மூத்த இசைக்கலைஞரும் இசை ஆசிரியருமான சங்கீத பூஷணம் எஸ்.பாலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் திருமதி. பிரியம்வதா மக்ஸ்மிலன் நிகழ்த்தவுள்ளதுடன் ஆசிரியுரையினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரையினை சங்கீத பூஷணம் எஸ். பாலசிங்கம் நிகழ்த்தவுள்ளதுடன் தொடக்கவுரையினை சோமராகம் இசை மன்ற ஆசிரியர் திருமதி. குமுதா உமா காந்தன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# மாற்றுத்திறனாளிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்

## யாழ்.அரச அதிபரிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**மாற்றுத்திறனாளிகளிற்காக அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் நிரந்தர வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்என மாற்றுத்திறனாளிகள் யாழ் . மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

யாழ் .மாவட்ட அரச அதிபருடன யாழ்.மாவட்ட மாற்றுவலுவுடையோர் சுய உதவிக்குழுவினர் நேற்று முன்தினம்கலந்துரையாடல ஒன்றை அரச அதிபர் அலுவலகத்தில் நடத்தியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் மாற்றுவலுவுடையோர் சுய உதவிக் குழுவினர் பல கோரிக்கைகளை அரச அதிபரிடம் முன்வைத்தனர்.

அதில் தமது குழுவிற்கான நிரந்தர நிதி, காணி, நிரந்தர அல்லது தற்காலிக செயலகம் எதுவும் இல்லை. அதை யாழ் நகர்ப் பகுதியில் அமைந்தால் இலகுவாக இருக்கும் என்றும் , மாற்றுத்திறளானாளிகளின் சுயதொழிலிற்கென வழங்கப்படும் நிதி போதாமையால் அது அதிகரிக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மலசலகூடத்திற்கான நிதியினை அதிகரித்தல், அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் ரூபா 3000 வழங்க ஆவன செய்தல், மாற்றுத்திறனாளிகளிற்கான சுய தொழில் பயிற்சி நிலையத்தினை யாழ். மாவட்டத்தில் உருவாக்குதல, ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகள் வாழ்வதற்கான வாழ்வில்லம் அமைத்தல், பாடசாலைகளில் மாற்றுத்திறனாளிகளிற்கான விசேட கல்வி அலகு இருப்பது போன்று உயர் கல்விகளில் விசேட கல்வி அலகை உருவாக்குதல்.

வாகன சாரதிகளிற்கும் நடத்துநர்களிற்கும் மாற்றுத் திறனாளிகள் சம்பந்தமான சட்டங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக கண்பார்வை அற்றோரின் வெள்ளைப்பிரம்பு சம்பந்தமான விழிப்பூட்டல் இவற்றுள் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

யாழ்.மாவட்டத்தின் அனைத்து இடங்களில் இருந்தும் நவீல்ட், வாழ்வகம், சிவபூமி போன்ற பாடசாலைகளில் மாற்றுத்திறனாளிகள் கல்வி கற்கச் செல்வதற்கான வாகன வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல், மாற்றுத்திறனாளிகளிற்கான வீட்டுத் திட்டம் போதாமை உள்ளதால் அதனையும் அதிகரித்தல் வேண்டும்.

பொதுவாக கண்பார்வையற்ற அல்லது கண் பார்வை குறைந்த மாற்றுத்திறனாளிக்கு விசேட உதவிகளை ஏற்படுத்துதல், வீடுகளில் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி கற்பதற்கான ஏற்பாடு. மாற்றுத்திறனாளிகளிற்கான கல்வி. போக்குவரத்து, தகவல் தொடர்பாடலில் புதிய தொழில்நுட்ப சாதனங்கள் எமது நாட்டில் உள்ள மாற்றுத்திறனாளிகளிற்கும் கிடைக்க வேண்டும், இதுவரை அரச, மற்றும் தனியார் நிறுவனங்கள் பலவற்றில் மாற்றுத்திறனாளிகளிறகான அணுகும் வசதி செய்யப்படாமல் உள்ளது .அது நிவர்த்தி செய்ய வேண்டும் என மாவட்ட சுய உதவிக் குழு அங்கத்தவர்கள் அரச அதிபரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-9)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வோதயத்தினால் முன்னெடுக்கப்படும் தொழில் பயிற்சி கற்கை நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் அமைப்பின் யாழ் மாவட்ட அலுவலகம் வடமாகாண சுற்றுலாத்துறை சம்மேளனத்துடன் இணைந்து தொழில் பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பித்திருக்கின்றன.

இந்நிலையில் சர்வோதயம் அமைப்பினால் 'சுற்றுலாத்துறை யும விருந்தோம்பலும்' மற்றும் 'மோட்டார் வாகன பழுது பார்த்தல்' ஆகிய கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறித்த கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாதம் ஐந்தாம் திகதி (05.12. 2015) தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் ஐந்தாம் (05.01. 2016) திகதிக்குள் விண் ணப்பிக்குமாறு கேட்கப்ப டுகின்றனர்.

விண்ணப்பதாரிகள் இணைப்பாளர், சர்வோதயம், இலக்கம் 568, நெடுங்குளம் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப் பிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

இதேவேளை மின்னஞ்சல் (E.mail) மூலமாக விண்ணப் பிப்பவர்கள் Jaffna@sarvodaya.org எனும் முகவரி ஊடாக தமது விண்ணபபங்களை அனுப்பி வைக்குமாறும் கோரப் படுகின்றனர்.

சராசரி வருமானத்தை ஈட்டும் குடும்பங்களில் உள்ள இளைஞர், யுவதிகளை சுயதொழில் பயிற்சி ஊடாக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவற்கு உதவுவதே இதன் நோக்கம் என யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர்எஸ்.யுகேந்திரன் தெரிவித்துள்ளார். (இ-9)

## பொதுக்கூட்டம்

வடமராட்சிக் கிழக்கு அபிவிருத்தி அமைப்பின் விசேட பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ்.தாழையடி றோ.க.த.க பாடசாலையில் முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சிக்கிழக்கு பிரதேச அபிவிருத்தி தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவிருப்பதனால் அப்பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவ் அமைப்பின் தலைவர் அ.சா. அரியகுமார் கேட்டுள்ளார். (இ-5-60)

## பாதீட்டு அறிக்கை

பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 2016ஆம் ஆண்டுக்கான வலி.கிழக்கு பிரதேச சபையின் பாதீட்டு அறிக்கை பொது மக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் 2015.12.04 இல் இருந்து 2015. 12.14 வரை வைக்கப்படும் என பிரதேச சபை செயலாளர் நா. குமணன் தெரிவித்துள்ளார். (இ

## அமரர் வீரசிங்கத்தின் 51வது நினைவு தினம்



கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 51ஆவது நினைவு தின நிகழ்வு நாளை சனிக்கிழமை கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி.மதுமதி வசந்தகுமார், வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் பொ.வாகீசன், யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத் தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசு ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர். இதன்போது முகாமைத்துவ ஆலோசகர் எஸ்.கோணேஸ்வரன் ஆக்கத்தில் உருவான கூட்டுறவுச் சட்டம் தொடர்பான பயிற்சி நூல் வெளி யீடு செய்து வைக்கப்படவுள்ளது.(இ-5)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
## மீள் கேள்வி அறிவித்தல்-2016

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-** 04.12.2015 முதல் 11.12.2015 நண்பகல் 12.00 மணிவரையான அலுவலக நேரம்.

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:-** 11.12.2015 பிற்பகல் 1.00 மணிவரை

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:-** 11.12.2015 பிற்பகல் 2.00 மணி

நிபந்தனைகள்

1.கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடனும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சீட்டு/ செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.

2.கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசபை, பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 11.12.2015 ஆம் திகதி பிற்பகல் 1.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

3.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

4.கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

5.கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

6.கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7.தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித்தொகை 300.000.00 ரூபாவுக்குட்பட்ட தொகையாயின் கேள்வித் தொகையின் 1/2 பகுதியையும் 300.000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 ஒரு பகுதியையும் 26.11.2015 முன் செலுதது சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

8.மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குத்தகைக் கேள்வி அட்டவணை- 2016**

| இல | குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய கேள்வி ல்வைப்புத் தொகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | 50.000.00 | 5,000.00 | 1000.00 |
| 02 | பொதுச்சந்தை (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சந்தை உட்புறம் அமைந்துள்ள கடைகள் உட்பட) | 800,000.00 | 20,000.00 | 1000.00 |
| | முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 176,000.00 | 20,000.00 | 1000.00 |
| 02 | பொதுச்சந்தை( மரக்கறி, மீன்சந்தை, து.வ.பாதுகாப்பு நிலையம் உட்பட) | 126,000.00 | 20,000.00 | 1000.00 |

**மா.மகாதேவன், செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(சி-2016) **திகதி: 03.12.2015**

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை
## பளை நகரத்தில் அமைந்துள்ள கடையினை குத்தகைக்கு வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல்-2016

பளை பிரதேச எல்லைக்குட்பட்ட பளைநகரத்தில் அமைந்துள்ள கடைத்தொகுதியின் கீழ்வரும் கடையினை 01.01.2016 ஆம் திகதியிலிருந்து நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

குறித்த கடைகளில் தேநீர்ச்சாலை, உணவுக்கடை, பழக்கடை, கருவாட்டுக்கடை, சிகை அலங்கரிப்பு நிலையம், வெற்றிலைக்கடை என்பன நடத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:-** 04.12.2015 தொடக்கம் 11.12.2015 நண்பகல் 12.00 மணிவரையான அலுவலகநேரம்

**கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி:-** 11.12.2015 பிற்பகல் 1.00மணி

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:-** 11.12.2015 பிற்பகல் 02.00மணி

**கேள்வி திறக்கப்படும் இடம் :-** பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| இல | குத்தகைவிபரம் | இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் - 07 | பளைநகரம் | 192,000.00 | 20,000.00 | 2000.00 |

நிபந்தனைகள் :-

01.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02.விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 04/12/2015 தொடக்கம் 11/12/2015 நண்பகல் 12.00 மணி வரையான காலப்பகுதிக்குள் படிவத்தினை பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தலைமை பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்க வேண்டும்.

03.கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடனும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை/செல்லுபடியானகடவுச்சீட்டு/செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.

04.கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப் பள்ளி பிரதேசசபை,பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 11.12.2015 ஆம் திகதி பிற்பகல் 1.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

05.ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

06.மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துதல் வேண்டும். முதல் மாத வாடகைப்பணத்தினை அடுத்துவரும் (ஒவ்வொரு மாதமும்) 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக்கட்டணப் பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

07.கேள்விச் சித்திகரராகத் தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவேண்டும்.

08.சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்று மாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.

09.சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10.சித்திகர குத்தகைக்காரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நடந்து கொள்ளவேண்டும்.

11.மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**மா.மகாதேவன்**
**செயலாளர்,** **திகதி:- 03.12.2015**
**பச்சிலைப்பள்ளிபிரதேச சபை, பளை.** (சி-2868)

# அரச உத்தியோகத்தர்களுக்கு விரைவில் மாற்றுத் திட்டம்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான வரிவிலக்கப்பட்ட வாகன அனுமதிப் பத்திர சலுகைக்கு பதிலாக மாற்று திட்டமொன்றை விரைவில் முன்வைக்க இருப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, 2017 முதல் சகல அரச நிறுவனங்களும் தமது உண்மையான பெறுமதியை வரவு செலவுத் திட்டத்தினூடாக வெளிப்படுத்த வேண்டும். மோட்டார் சைக்கிள், ஆட்டோ என்பவற்றிற்கு புகைப் பரிசோதனை கட்டணம் அறவிடப்படமாட்டாது. வெளிநாட்டவருக்கு காணி விற்கப்போவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தவறானது. கடந்த ஆட்சியிலே துறைமுக நகரில் 216 ஏக்கர் காணி சீனாவுக்கு உரித்தாக வழங்கப்பட்டது. ஆனால் எமது அரசாங்கம் முதலீட்டாளர்களுக்கு 99 வருட குத்தகைக்கே காணி வழங்க இருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மேலும் தேவைகள் இருப்பதால் கூடுதல் நிதி ஒதுக்குமாறு தமிழ் எம்.பிக்கள் கோரினர். சகல மாகாணங்களையும் நாம் ஒன்று போலவே கவனிக்கிறோம். ஏதும் குறைபாடு இருந்தால் அதனை சரிசெய்யவும்தேவைகள் இருந்தால் நிறைவேற்றவும தயாராக இருக்கிறோம். வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு 14 பில்லியன் மேலதிக நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோட்ட பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அவா மேலும்தெரிவித்தாா். (இ-7-10)

# மகிந்த எங்கே? ஏன் வரவில்லை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எங்கே? ஏன் அவர் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமகே நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மகிந்த அணியைப் பார்த்து கேள்வியெழுப்பினார்.

நளின் பண்டார எம்.பி. இவ்வாறு கேள்வியெழுப்பியதையடுத்து ஆளும்கட்சியினர் ஊ சத்தம் எழுப்பி மேசையில் தட்டினர். இதேவேளை மகிந்த ஆதரவு அணியினரும் கூச்சலிட்டனர். அத்துடன் பலத்த சிரிப்பொலியும் எழுந்திருந்தது.

வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட கடந்த 20 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ சபையில் சமுகமளித்திருந்தார்.

எனினும் கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நேற்றுமுன்தினம்புதன்கிழமை வரை ஒன்பது தினங்கள் இடம் பெற்ற விவாதங்களில் ஒரு தினமேனும் அவர் பாராளுமன்றத்தில் சமுகமளித்திருக்கவில்லை.

2016 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் நேற்றைய இறுதித் தினம் வரையில் அவர் விவாதத்தில் கலந்துகொண்டிராத நிலையிலேயே நளின் பண்டார எம்.பி. மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார.(இ-7-10)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 44 3/4
உயரம்: 5'23"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4801

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 12 சூரிசெவ் 4 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ லண்டன் PR
தொ.இ: B/4802

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 19 செவ் 2 ல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L லண்டன் NOT PR
தொ.இ: B/4803

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 44 செவ் 7 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4804

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 15 3/4
உயரம்: 5'2"தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/4807


பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 30
தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/4808


பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 28
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/4812

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 94 செவ் 8 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA, NHDIT
தொ.இ: G/4813

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

# ஒதியமலை படுகொலை நினைவுநாள் உறவினர்கள் சுடரேற்றி அனுஷ்டிப்பு





முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒதியமலை படுகொலையின் 31 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒதியமலை கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி அதிகாலை வேளையில் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த இளைஞர் களமற்றும்ஆண்களை சனசமூக நிலையத்திற்கு வரவழைத்துவிட்டு அவர்களது ஆடைகளை களைந்து அவற்றினால் அவர்களை கட்டி 27 பேரை சுட்டுப் படுகொலை செய்திருந்ததுடன் 5 பேரை கொண்டும் சென்றனர்.

அவர்களும் பின்னர் கொல்லப்பட்டதாகவே உறவினர்கள் கருதுகின்றனர். இந் நிலையில் படுகொலை செய்யப்பட்ட 32 பேரின் 31 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் இறந்தவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அவர்களுக்காக ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜிரிலிங்க நாதன், து.ரவிகரன், படுகொலை செய்யப் பட்டவர்களின் உறவினர்கள், அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொணடு விளக் கேற்றி அஞ்சலி செலுத்தினர். (2-250-281)

## நோயாளர் விடுதி கட்டடத் திறப்பு விழா

(பனிக்கன்குளம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கட்டப்பட்ட மூன்று மாடி நோயாளர் விடுதி கட்டடம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சுகாதார அமைச்சர் , இந்திய தூதுவர், யாழ் இந்திய துணைத் தூதர் , பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

200 நோயாளிகள் படுக்கை வசதிகளைக் கொண்ட இந்த விடுதியானது 180 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடம் திறக்கப்படுவதால் பல நோயாளர்கள் நன்மையடைவதோடு வைத்தியசாலை விடுதிக்கான பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-281)




## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 காலை 9 மணிக்கு மணல் ஏல விற்பனை நடைபெறுமென நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (2)



யாழ்ப்பாணம்-மன்னார் வீதியில் மண்டைக்கல்லாறு பகுதியில் ஏ-32 வீதியை குறுக்கெடுத்து வெள்ளம் பாய்வதால் அவ்வீதி ஊடான போக்குவரத்து பாதிக் கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இராணுவத்தினரது படகும் கடற்றொழில் சமாசத்தின் படகும் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்:-மல்லாவி, பனிக் கன்குளம் செய்தியாளர்கள்)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று நிவாரண பொதிகள் வழங்கப்படும்

சங்குப்பிட்டி - மன்னார் வீதியிலுள்ள பூநகரி பிரதேசத்தில் மண்டைக் கல்லாறு பகுதியானது வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ளது.

இவ்வீதியூடான போக்குவரத்திற்கு படகுகள் மூலம் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பளைப் பிரதேசத்தில் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் தமது குடியிருப்புகளுக்கு திரும்பியுள்ளனர்.

'அற்ரா' நிறுவனத்தினால் இவர்களுக்கான தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் நேற்று முன்தினம் பளை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பூநகரி பிரதேசத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கான இதே அளவிலான உதவிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை பூநகரி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் அறிவித்துள்ளார். (2-254)

### நவீன வசதிகளைக் கொண்ட

# 7 மலசலகூடங்கள் அமைப்பதற்கு ஒரு கோடி 33 இலட்சம் ரூபா நிதி

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆயிரம் பாடசாலை திட்டத்தில் இணைந்துள்ள ஏழு பாடசாலைகளுக்கு ஒரு கோடியே 33 இலட்சம் ரூபா செலவில் மாணவிகளுக்கான நவீன வசதிகளைக் கொண்ட மலசலகூடம் அமைப்பதற்கு அரசாங்கத்தினால் நிதியொதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்ற வருவதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 7 பாடசாலைகள் ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன.


இப்பாடசாலைகளில் மாணவிகளுக்கான நவீன வசதிகளைக் கொண்ட மலசலகூடம் அமைப்பதற்கு தலா ஒரு பாடசாலைக்கு 19 இலட்சம் ரூபா வீதம் ஒரு கோடியே 33 இலட்சம் ரூபா ஏழு பாடசாலைகளுக்கும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில் மு/ மாங்குளம் மகா வித்தியாலயம், மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/ முத்தையன்கட்டு இடதுகரை மகா வித்தியாலயம், மு/யோகபுரம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/ மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளிலேயே மலசலகூடங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக் கிழமைக்கு முன்னர் வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# மின்சார சபையின் ஆளணிகளை அதிகரித்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்

### வைத்திய கலாநிதி சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு



(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வளப்பற்றாக்குறை காரணமாகவே மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியாது உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய குறை நிவர்த்தி நடமாடும் சேவை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கடந்த முதலாம திகதி அன்று கொட்டும் மழையிலும் சிறப்பாக இடம் பெற்றது.

மாணவர்களின் இனியம் இசை வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்துவரப் பட்டு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 30 வருடத்திற்கு மேலாக மின்சாரமின்றி பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்த மக்கள் தற்போது மெல்ல மெல்ல மினசாரத்தை பெற்று வருகின்றனர். முல்லை மாவட்டத்தில் வளப் பற்றாக்குறை காரணமாகவே மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நான் நேரடியாக மின்சக்தி எரிவாயு அமைச்சருடன் பாராளுமன்றத்தில் கலந்துரையாடியபோது அனைத்து மக்களுக்கும் இலவச மின்சாரம் வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். எனவே மின்சார சபையின் ஆளணிகளை அதிகரித்து உடன் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது மின்சார சபையின் முக்கிய பொறுப்பான கடமையாகும்.

இவ்விடயத்தில் மின்சார சபையின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு பொது மக்களும் பொறுமைகாத்து மின்சாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன், அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, பா.டெனீஸ்வரன், அமைச்சுச் செயலாளர்கள் மாகாண உறுப்பினர், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-250)

## பாலன் பிறப்பு ஒளிவிழா

(மல்லாவி)

மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் பாலன் பிறப்பு ஒளிவிழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் கிறிஸ்தவ மன்ற மாணவர் தலைவர் அ.பிரதீபன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் எல்.மாலினி வெனிற்றன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மாங்குளம் புனித அக்கினேஸ் அம்மாள் ஆலய பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன், மாங்குளம்சலேசியன் டொன் பொஸ்கோ குருமட அருட்தந்தைகளான வின்சன் கபிலை, மாங்குளம் தென்னிந்திய திருச்சபை ஆலய அருட்தந்தை குகனேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் திருப்பலி பூசைகளையும் ஒப்புக் கொடுக்கவுள்ளனர். (2-15)




# கொடிய யுத்தம் விட்டுச்சென்ற வடுக்களில் மிகமோசமானது வலுவிழப்பு ஏற்பட்டமை

## வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு



கொடிய யுத்தம் விட்டுச்சென்ற வடுக்களில் மிகமோசமானது பலருக்கு வலுவிழப்பை ஏற்படுத்தியமையாகும். துப்பாக்கி பிரயோகம், எறிகணை வீச்சு, விமானத்தாக்குதல், நிலக்கண்ணி என பலவழிகளிலும் காயப்பட்டு தமது அவயவங்களை இழந்து மற்றவர்களில் தங்கிவாழும் விசேட தேவைக்குட்பட்டவர்களாக நம்மில் பலர் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியது நமது கடமையாகும். இவர்களுக்கு பலவிசேட செயற்றிட்டங்களை வடக்கு மாகாண சபை முன்னெடுத்துவருவதாக வடக்கு மாகாண சுகாதார, சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மார்கழி மாதம் 3 ஆம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகளுக்கான தினமாகும். உலகெங்குமுள்ள மக்கள் இந்த தினத்தை மாற்றுத்திறனாளிகளை முன்னிலைப்படுத்தி அனுஷ்டிக்கின்றார்கள். இது வெறும்கொண்டாட்டமல்ல. தமது அடிப்படை தேவைகளுக்குகூட மற்றவர்களில் தங்கி வாழும் மாற்றுத் திறனாளிகளின் நிலைமை மிகமோசமானது. குறிப்பாக இந்த நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் மூலம் விசேட தேவைக்குட்பட்டவர்களாக ஆக்கப்பட்டவர்கள் பல வேதனைகளை அனுபவித்து வருகின்றார்கள். மாகாண புனர்வாழ்வுமற்றும சமூக சேவைகள் அமைச் சினால் இவர்களுக்கான விசேட செயற்றிட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம்.

நாட்டின் ஏனைய மாகாணங்களிலுள்ள மாற்று திறனாளிகளை விட எமது மாகாணத்தில் அதிகமானவர்கள் இருந்துவருகின்றார்கள். இவர்களில் பலர் யுத்தத்தினால் விசேட தேவைக்குட்பட்டவர்களாக செயற்கையாக ஆக்கப்பட்டவர்கள். இவர்களில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதைவிட அவர்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட மலசலகூடங்கள் அமைப்பதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்திற்கான விசேட புனர்வாழ்வு வைத்தியசாலையொன்றை மாங்குளத்தில் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச விசேட தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகம் மற்றும் தெற்கு கல்வி அலுவலகம் என்பன இணைந்து விசேட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, விசேட தேவையுடையோருக்கான முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் காலை ஆரம்பமாகிய முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, வவுனியா பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

இதனையடுத்து வவுனியா பேருந்து நிலையத்தில் விசேட உரைகள் இடம்பெற்றதன் பின்னர் பேருந்துகளில் விசேட தேவையுடையோருக்கான இருக்கைகளை அடையாளம் காணும் வகையிலான ஸ்டிக்கரகள் ஒட்டப்பட்டன. அதனை தொடர்ந்து விசேட பேரணியொன்று இடம்பெற்றிருந்ததுடன், நகரசபை மண்டபம் வரை பேரணியாக சென்று அங்கு விசேட நிகழ்வுகளையும் முனெடுத்திருந்தனர். (2-281-250)

# மாணவர்களுக்கான இலவச சீருடைக்கு பண வவுச்சர்கள்

## இந்நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றார் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியிலுள்ள அரச பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு இலவச சீருடைக்கான பண வவுச்சர்கள் வழங்கும் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கமானது பாடசாலை மாணவர்களுக்கு கடந்த பல வருடங்களாக நடைமுறையில் இருக்கும் இலவச சீருடை விநியோகத்தில் மாற்றம் செய்து எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் இருந்து சீருடைக்குப் பதிலாக பண வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

இச்செயற்பாடானது பாடசாலை மாணவர்களிடையே பல்வேறுபட்ட தரத்திலான சீருடை துணிகள் பயன்பாட்டை ஏற்படுத்துவதுடன் மன உளைச்சல்களையும் ஏற்படுத்தவுள்ளன.


நாடுபூராகவும் 20 வீதமான மாணவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற நிலையில் அவர்கள் தூய்மை நிலை இன்றி சீருடைகளைப் பயன்படுத்தி வரும் நிலையில் தற்போதைய இச்செயற்பாடானது மேலும் மாணவர்களின் தொகையை அதிகரிக்கவுள்ளது.

அதுமட்டுமன்றி ஏற்கனவே அதிபர்கள், ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் பாடசாலைகளில் பல்வேறு வேலைப் பளுக்களைத் தாங்கியுள்ள நிலையில் இச்செயற்பாடும் அவர்களுக்கு சுமையை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோர்கள் சீருடைக்கான வவுச்சர்களைப் பெறுவதற்காக பாடசாலைக்கும் சீருடைத் துணி கொள்வனவிற்கான வர்த்தக நிலையங்களுக்கும் தமது தொழில் வாய்ப்பை விட்டுவிட்டு அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது போன்ற சீருடைத் துணிகளை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு சிகிச்சையின்றி நோயாளர்கள் அவதி



அரசாங்கத்தின்வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள்சங்கம் நேற்று காலை முதல் நாடு தழு விய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வழமை போன்று தங்களது கடமைகளை மேற்கொள்ளவில்லை. ஆனால் அவசரசேவை பிரிவு இயங்கியது.

இருந்தும் சில பிரிவு சிகிச்சைகள் இடம்பெறாமையினால் வைத்தியசாலைக்கு வருகைத ந்த நோயாளர்கள் திரும்பிச்செல்லும் நிலையும் ஏற்பட்டது.

இதேவேளை வைத்தியர்கள் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பில், வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்களும் நேற்று ஈடுபட்டுள்ளனர்.

தீவிர சிகிச்சை பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் வைத்தியர்கள கடமையாற்றாமைகாரணமாக பல நோயாளர்கள் சிகிச்சையின்றி நீண்டநேரம் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எனினும் அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகள் தடையின்றி இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்திய அதிகாரிகளது தொழிற் சங்க நடவடிக்கையால் நாடளாவிய ரீதியில் நோயாளர்கள் கடும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ள நிலையில், வைத்தியர்கள் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (2-281-250)

## பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான பெண்களுக்கான தற்காப்பு பயிற்சி





(கிளிநொச்சி)

பால்நிலை வன்முறைகளுக்கெதிரான 16 நாட்களுக்கானசெயற்பாடுகள் எனும் தொனிப்பொருளில் பெண்களுக்கான தற்காப்பு பயிற்சி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட செயலகங்களின் ஊடாக நடைபெற்று வருகின்றது.

இதற்கான அனுசரணையை யு.என்.எச்.சி.ஆர்., ஐ.ஓ. எம், ZOA, எக்ஸ்பாம், கரித்தாஸ், கியூடெக், வேள்விசன் ஆகிய அமைப்புக்கள் வழங்கி வருகின்றன. தற்காப்பு பயிற்சிகளை கொழும்பிலிருந்து வருகை தந்த தற்காப்பு க்கலை நிபுணர் சிகான் அன்ரோ தினேஷ் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## விடுதியில் தங்கி கல்வி கற்கவுள்ள மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்க அதிபர் வேண்டுகோள்

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தினரால் சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆண், பெண் மாணவர் விடுதியானது எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி இயங்கவுள்ளதாக கல்லூரியின் அதிபர் க.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்விடுதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தூர பிரதேசங்களிலிருந்து கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான மாணவ, மாண வியரே உள்வாங்கப்படவுள்ளதால் விடுதிகளில் தங்கி கல்வி கற்க விரு ம்பும் மாணவர்களின்பெற்றோர்கள்உடனடியாக தமது பிள்ளைகளின் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-302)

## வடக்கு மாகாண பாடசாலைகள் நாளை கல்வி நடவடிக்கைக்காக திறக்கப்படும்

வடக்கு மாகாண பாடசாலைகள் அனைத்தும் நாளை சனிக்கிழமை கல்வி நடவடிக்கைக்காக திறக்கப்படும் என வடக்குமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 26ம் திகதி, யாழ். கோண்டாவில் புகையிரதநிலையத்துக்கு அருகில் உயர்தர வகுப்பு மாணவனான இராஜேஸ்வரன் செந்தூரன புகையிரதத்துக்கு முன்பாக பாய்ந்து உயிரிழந்திருந்தார்.

மிக நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியே பிரஸ்தாப மாணவன் தற்கொலை செய்துகொண்டதாக அந்த மாணவன் எழுதி வைத்திருந்ததாகக் கூறப்படும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனால், அந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த 27ஆம் திகதி வடக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினம் வழங்கப்பட்ட விடுமுறைக்கான பதில் பாடசாலையானது நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், அன்றைய தினமே வடக்கு மாகாண பாடசாலைகள், அனைத்தும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன.

இதேவேளை, நாட்டிலுள்ள ஏனைய பாடசாலைகள், மூன்றாம் தவணை விடுமுறைக்காக இன்று வெள்ளிக்கிழமை மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)





தமிழ்த் தேசிய மாவீரர் நினைவு தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் உள்ள Wembley Arena நகரில் நினை வேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ் வில் ஆயிரக்கணக்கான புலம்பெயர் ஈழத்தமிழ் உறவுகள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# தமிழ் பேசும் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு வேண்டும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அரசியல் உரிமைப் பிரச்சினைக்கும், யுத்தம் காரணமாக உருவாகிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வுகள் காணப்பட வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நிலையியற் கட்டளை 23/2ன கீழ் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா, தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண் டும் என்று எழுந்திருக்கும் கோரிக்கையினையும் அரசாங்கம் கவனத்தில் எடுக்கும் என்பது எமது நம்பிக்கை யும் எதிர்பார்ப்பும் ஆகும். தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதன் மூலம் அரசாங்கம் தனது நல்லெண்ண செயற்பாடுகளை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த முடியும்.

சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆக்கபூர்வமான எந்தவொரு தீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்கவில்லையே என்று அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தி வருகிறது. இணக்க அரசியல் வழிமுறைக்கு வந்திருந்தாலும், அதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள் குறித்து சிந்திக்காதவர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் இருந்து வருவதால், அரசாங்கமே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அக்கறை செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே இது விடயத்தில் அரசாங்கம் எந்த நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது?...

நாட்டில் உள்ள பல சிறைகளிலும் 217 தமிழ் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருந்ததாக தெரிய வந்திருக்கின்றது. அவர்களில் நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்று தண்டனை வழங்கப்பட்டிருப்போர், நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இருப் போர் மற்றும் நீதிமன்ற விசாரணைகளே இதுவரை நடை பெறாத நிலையில் இருபபோர் என்று மூன்று வகையினர் உள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும். எமது நாட்டில் ஏற்கனவே 1971 மற்றும் 1989 ஆம்ஆண்டுகளில்ஆயுதப் போராட்டத்தில் ஈடு பட்ட ஜே.வி.பியினருக்கும், 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகளுக்கும், தமிழ் இயக்கப் போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி படையினர் கைவசம் வைத்திருக்கும் மக்கள் குடியிருந்த காணிகளையும், குடியிருப்பு பகுதிகளில் இருக்கும் பொது இடங்களையும் தமிழ் மக்களிடம் மீள ஒப்படைத்தல் போன்ற விடயங்களை அரசாங்கம் விரைவாக செயற்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்துடன் இவ்விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக அவர்களே கூறிவருகின்ற அதேவேளை, பேசப்பட்ட விடயங்கள் குறித்தும், அப்பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் மக்களுக்கு தெளிவுபடுத்த மறுத்து, பொறுப்பற்ற முறையில் செயற்பட்டு வருகின்றார்கள். இந்நிலையில், இதற்கான பொறுப்புணர்ச்சியை உணர்ந்து இவைகள் குறித்து அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தாமல் இருப்பது ஏன்?..

கைதிகளுக்கு பொது மன்னிப்புக் கோரியும், காணிகளை மீள ஒப்படைக்குமாறும் தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்ற போது தான் அரசாங்கம் அதைப் பற்றி பேசுகின்றது என்று கூறுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கம் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும் அரசாங்கம் மீது குற்றங்களைச் சுமத்துகின்றது.

இத்தகைய முரண்பாட்டு நிலையானது, அரசு மீதான நம்பிக்கையீனத்தை வளர்த்து விடுவதாகவும், தேசிய நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை பாதிப்பதாகவுமே அமைந்துவிடும். இந்த நிலை குறித்து அரசாங்கம் என்ன கருத்தை கொண்டிருக்கிறது?...

தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழப்பார்களேயானால் அதனை சுய இலாப அரசியலுக்குப் பயன படுத்துவதற்கு சில தரப்பினருக்கு வசதியாக இருக்கலாம். இந்த நிலைமை தொடர்வதை இந்த அரசாங்கம் விரும்புகின்றதா? எனவும்அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

## நினைவுப் பகிர்வும் கலந்துரையாடலும்

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் (JMF) ஏற்பாட்டில் கட்டடக் கலைஞர் சொ.அ.டேவிட் (டேவிட் ஐயா) பற்றிய நினைவுப் பகிர்வும் கலந்துரையாடலும் எதிர் வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-9)

## மாற்றுத்திறனாளிகள் மையம் மீது துப்பாக்கி சூடு: 20 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் மாற்றுத்திறனாளிகள் மையம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் கலிபோர்னியா மாகாணத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்செல்ஸ் அருகில் உள்ள சான் பெர்னார்டினோ என்ற பகுதியில் இந்த சம்பவம் நடைபெற்றது. சான் பெர்னார்டினோ நகரம் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டது.


துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்தில் பொலிஸார் மற்றும் வெடி பொருள் நிபுணர்கள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். பொலிஸார் விசாரணையில் ஒன்றிலிருந்த மூன்று பேர் இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. தற்போது தாக்குதல் நடத்தியவர்களின் பிடியில் யாருமில்லை. (இ-7-10)

## பரிசளிப்பு நிகழ்வு


வடமராட்சி புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை அதிபர் த.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய சங்கீதபாட ஆசிரியஆலோசகர் திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5-60)





சில்லாலை றோ.க.த.க பாடசாலை ஆசிரியர் திருமதி. எப். ஆர். ஜெ. ஜெயந்தன் எழுதிய லெஸ்றை எனும் க. பொ. சாதாரண தர மாணவர்களுக்கான ஆங்கில பாட இலகு வழி காட்டல் நூல் வெளியீடு அண்மையில் யாழ். சில்லாலை றோ. க.த.க பாடசாலையில் நடைபெற்ற போது...



இந்தியா திருச்செந்தூர் சுப்ரமணியம் தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி கால உரை அரங்கில் கலாநிதி.ஆறு.திருமுருகன் உரையாற்றும் காட்சி




சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினால் சுன்னாகம் பசுமைத் திட்டம் என்ற தலைப்பின் கீழ் ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம் பெற்ற போது...



வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையின் 120 ஆம் ஆண்டினை நினைவு கூரும் வகையில் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் அதிபர் ந. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.



தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுத்த கம்பன் விழாவில் உசன் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் ஐ. வரதராஜா கௌரவிக்கப்பட்டிருந்தார். அதனைப் படத்தில் காணலாம்.



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் விடுதிச் சாலையில் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட உணவுச் சாலை கட்டடத் தொகுதியின் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. இதன் போது லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.கே. இரவீந்திரன் நினைவுக் கல்லினை திரை நீக்கம் செய்து வைப்பதையும் லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.கே ரவீந்திரனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர் உட்பட ஏனைய விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.




புதிய ஜனநாயக மாக்சிக லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலக உணவக மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற கருத்தரங்கின் போது....



யாழ்ப்பாணம் கொல்லங் கலட்டி புதிய ஒக்ஸ்போட் அக்கடமியின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு தின நிகழ்வும் அண்மையில் கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது...

# சென்னையில் வெள்ளத்தால் ஈழத்தமிழர்களும் அந்தரிப்பு



சென்னையிலும் புறநகர் பகுதிகளிலும் கொட்டி வரும் பெருமழை மற்றும் வெள்ளத்தினால், ஈழத்தமிழர்களும் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர். போரினால் இடம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் பெருமளவில் சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

சென்னை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளைப் புரட்டிப் போட்டுள்ள வெள்ளத்தினால், ஈழத் தமிழர்கள் அதிகளவில் வசிக்கும், வளசரவாக்கம் பகுதி பெரும்பாதிப்பை சந்தித்துள்ளது.

அத்துடன் ஈழத் தமிழர்கள் வசிக்கும் கே.கே.நகர், மடிப்பாக்கம், அண்ணாநகர், திருவான்மியூர், கொட்டிவாக்கம், நெசப்பாக்கம், போரூர், உள்ளிட்ட பகுதிகளிலும், பாதிப்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன. பலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி, மாடி வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அத்துடன் தொலைபேசித் தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் பற்றிய தகவல்கள் வெளிவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சென்னை வெள்ளத்தினால் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டதாக தகவல் கிடைக்கவில்லை என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் சென்னையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால், உதவிகள் தேவைப்படுமிடத்து, இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தர்மபால, 0091-9 962 627 956, இந்திரக்க 0091-944 401 0999 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## ஊடகங்களையும் முடக்கியது சென்னைப் பெருவெள்ளம்

சென்னையில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தினால், இந்தியாவின் பழம்பெரும் நாளிதழான 'த ஹிந்து' 137 ஆண்டுகளில் முதல் முறையாக நேற்று முன்தினம் வெளிவரவில்லை. அத்துடன் ஜெயா மற்றும் புதிய தலைமுறைத் தொலைக் காட்சிகளும்சேவையை நிறுத்தியுள்ளன.

சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தினால், 137 ஆண்டு வரலாற்றைக்கொண்ட 'தஹிந்து' ஆங்கில நாளிதழ் தனது வரலாற்றில் முதல் முறையாக நேற்று முன்தினம் பதிப்பை வெளியிடவில்லை.

1878ஆம் ஆண்டு தொடக்கம்சென்னையில் இருந்து வெளிவருகிறது 'த ஹிந்து' ஆங்கில நாளிதழ்.

இதன்ஆசிரியர்பீடம்சென்னை நகருக்குள் அமைந்திருக்கின்ற அதேவேளை, சென்னையில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள மறைமலை நகர் பகுதியிலேயே அச்சகத்தைக் கொண்டுள்ளது.

'த ஹிந்து' நாளிதழ் பணியாளர்கள், மறைமலை நகரிலுள்ள அச்சகத்துக்கு செல்ல முடியாதளவுக்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளதால், நேற்று முன்தினம் பதிப்பை 'த ஹிந்து' வெளியிடவில்லை. (இ-7-10)

## கடலூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது

கடலூர்மாவட்டத்தில்மழை சிறிது கூட நிற்காமல் கடந்த சில நாட்களாக இடை விடாது கொட்டியது. இதனாலமாவட்டம முழுதும் எங்கு பார்த்தாலும வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது.

ஏற்கனவே பெய்த மழையினால் பலத்த சேதம் ஏற்பட்டிருந்தது. இப்போது மீண்டும் தொடர்ந்து மழை பெய்வதால் அனைத்து பகுதிகளிலும் பாதிப்பு அதிகமாகவுள்ளது.

கடலூர், நெல்லிக்குப்பம், கோண்டூர், பண்ருட்டி, நெய்வேலி, ஊ.மங்கலம் பகுதிகளிலுள்ள வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது. இங்கு இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் காலை வரை 8 ஆயிரம் பேர் வெள்ளப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும்வெள்ளம்ஏற்படலாம் என கருதப்படும் 40 இடங்களில் தயார் நிலையில் மீட்புப் படையினர் நிறுத்தப் பட்டுள்ளனர். தீயணைப்பு படையினர், பொலிஸார் மற்றும் நீச்சல் வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலைமை மோசமாக இருபதால் வெளிமாவட் டங்களில் இருந்து 200 தீயணைப்பு வீரர்கள் வரவழைககப் பட்டுள்ளனர். நன்கு நீச்சல தெரிந்த மீனவர்கள் 30 பேர் வெள்ளப்பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர். (இ-7-10)

# இலட்சக்கணக்கான மக்கள் தவிப்பு; மீட்புப்பணியில் இராணுவம் தீவிரம்

சென்னை எங்கும்வரலாறு காணாத வெள்ளத்தினால் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் இலட்சக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதுடன், தேவையான அவசர உதவிகளை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

வைத்தியசாலைகள் அனைதும் நீரினால் மூழ்கியுள்ளதால், பாதிக்கப்பட்ட மக்கள் வைத்திய தேவைகளுக்காக தடுமாறி வருகினறனர்.

பெய்துவரும் அடைமழையால் தலைநகர் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில ரயில்,பேருந்து போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்தும்துண்டிக்கப்பட்டுள்ளது.

ரயில் தண்டவாளங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் தென்மாவட்டங்களுக்கு செல்லும் 12 ரயில்களும் வெளி மாநிலங்களுக்கு செல்லும் 3 ரயில்களும் நேற்று முன்தினம் இரத்து செய்யப்பட்ட நிலையில் நேற்று மேலும் 11 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழ்கத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் இன்னும் 4 நாட்களுக்கு மழை தொடருமென வானிலை ஆய்வு நிலையம் எச்சரித்துள்ளது.

வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மையம் காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இரு நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பெய்துவரும் அடைமழையால் குறித்த 5 மாவட்டங்களும் வெள்ளக்காடாக மாறியுள்ளன.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. வீடுகளை விட்டு வெளியே வர முடியாமல் பலர் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.(இ-7-10)

## 100 போகோஹராம் தீவிரவாதிகளைக் கொன்று 900 பிணைக்கைதிகளை விடுவித்தது ராணுவம்

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஜனாதிபதியாக முகமது புகாரி கடந்த மே மாதம் முதல பதவி வகித்து வருகிறார். இதற்கு முன்பாக குட்லக் ஜோனாதன் என்பவர்பதவிவகித்து வந்தார்.

நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போகோஹராம் தீவிரவாதிகள் செயறபட்டு வருகின்றனர். வெடிகுண்டு வீச்சு, துப்பாக்கி சூடு போன்ற வன்முறைச் சம்பவங்கள் மூலம் தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை கொன்று குவிக்கின்றனர்.

மாணவிகள் மற்றும் இளைஞர்களை கடத்தி விற்பனை செய்கின்றனர். இவர்களின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் போகோஹராம் த்விரவாதிகளை கட்டுப்படுத்த அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளை நைஜீரியா உதவிக்கு அழைத்தது. அதன்படி பல்வேறு நாடுகள் போகோஹராம் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் கடந்த வாரம் இங்கிலாந்து இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், 900 பிணைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டதாகவும் அந்நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

"இங்கிலாந்து இராணுவத்தினால் இந்த அழிப்பு நடவடிக்கை கடந்த 26 முதல் 28 வரை நைஜீரிய எல்லைப் பகுதியில் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்" என்று இங்கிலாந்து நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோசப் அச்சோமோ தெரிவிததுள்ளார்.

மேலும் அவர்களிடம் இருந்து 900 பிணைக் கைதிகள் மீட்கப்பட்டதோடு, ஐ.எஸ் தீவிராவாதிகளின் கொடிகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)

## அகதிகளை விரட்டியடித்த அமெரிக்கா

கியூபாவிலிருந்து அமெரிக்காவுக்கு சென்ற அகதிகள் நடுக்கடலில் வழி மறித்துத் திருப்பி அனுப்பப்பட்டதாக அமெரிக்க கடலோரக் காவல் படையினர் தெரிவித்தனர்.

இது குறித்து அமெரிக்க கடலோரக் காவல் படையின் மூத்த அதிகாரி கருத்து வெளியிடுகையில்,

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையே உள்ள ஃபுளோரிடா ஜலசந்தி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 7 படகுகளில் அகதிகள் வருவதை கடலோரக் காவல் படையினர் கண்டனர்.

அந்தப்படகுகளைக்கடலோரக காவல் படையினர் நடுக் கடலில் வழி மறித்தனர்.கியூபாவைச் சேர்ந்த அந்தப படகுகளில்108பேர் இருந்தனர்.

அவர்களிடம் விசாரணை நடத்தியபோது, அமெரிக்காவில் புகலிடம் தேடி ஆபத்தான அந்தப்பயணத்தைமேற்கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இரு கடலோரக் காவல் படைப் படகுகளில் அவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டு, கியூபாவின் பாஹியா டி கபானாஸ் பகுதியில் பத்திரமாக இறக்கி விடப்பட்டனர். கியூபாவிலிருந்து வரும் மக்கள்தொடர்பான கொள்கையில் எந்த மாற்றத்தையும் அமெரிக்க அரசு அறிவிக்கவில்லை.

நடுக்கடலில் கண்டவர்களைக கடலோரக் காவல் படை திருப்பி அனுப்பியது என்றார் அவர்.


புகலிடம் தேடி கியூபாவிலிருந்து வருவோரை நடுக் கடலில் கண்டால், அமெரிக்கா அவர்களைத திருப்பி அனுப்பி வருகிறது.

அதே சமயத்தில், கியூபாவிலிருந்து புகலிடம் தேடி வருபவர்கள் அமெரிக்கக் கரையை அடைந்துவிட்டால் அவர்களுககுப புகலிடம் அளித்து, சிறிது காலத்துக்குப் பிறகு நிரந்தரக் குடியுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து, கியூபாவிலிருந்து அமெரிக்கா வர முயற்சித்த 915 பேர் நடுக்கடலில் வழி மறித்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

கியூபாவிலிருந்து, கடந்த ஆண்டு வந்த 4,462 பேரும் அதற்கு முந்தைய ஆண்டு வந்த 3,940 பேரும் நடுக் கடலில் வழி மறித்து, திருப்பி அனுப்பப்பட்டனர்.

சோவியத்யூனியன்உடனான பனிப்போர் காலந்தொட்டு, அதன் நட்பு நாடான கியூபாவிலிருந்து வருவோர் தொடர்பாக அமெரிக்கா பின்பற்றி வரும் அகதிகள் கொள்கையில் இதுவரை எந்த மாற்றமும் அறிவிக்கப்படவில்லை. (இ-7-10)







# வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத
# வரலாறு காணாத பேரழிவு



முன்னெப்போதும் இல்லாத வகையில் பெய்து வரும் வரலாறு காணாத பெரு மழையால், சென்னை மாநகரமே, வெள்ளத்தில் மூழ்கிப் போயுள்ளது. இதனால், கட்டடத் தீவுகளாக சென்னை நகரம் காட்சி அளிக்கிறது. இலட்சக் கணக்கான மக்கள் வீடு களை விட்டு வெளியேறி, இருப்பிடம், உணவு, அடிப் படை வசதிகளின்றித் தவித்து வருகின்றனர்.


சென்னை நகரம் சந்தித்துள்ள வரலாற்றுப் பெருந்துயராக அமைந்துள்ள இந்த இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முடியாத அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், சென்னை தாம்பரத்தில் மட்டும் 490 மி.மீ. மழை பதிவாகியது. செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியதையடுத்து, அங்கிருந்து நீர் திறந்து விடப்பட்டதால், சென்னையிலும், புறநகர்ப் பகுதிகளிலும், பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

















# நான்தான் பெஸ்ட்!

“மனிதர்கள் தேனை எடுப்பதற்காக உங்கள் இனத்தில் எத்தனை பேரை அழிக்கின்றனர் என்று எண்ணிப் பாருங்கள்.

உங்களை அழிப்பதோடு மட்டுமின்றி, உங்களது வீட்டையுமல்லவா அழித்து விடுகின்றனர்.

உங்களைப் பாதுகாப்பதற்காக உங்களில் ஒருவர் ஒரு மனிதனைக் கொட்டி விட்டால் போதும்.

உங்களது கடியைத் தாங்கிக் கொண்டு மனிதர்கள் பொறுமையாக இருந்து விடுவார்களா என்ன?

“எரிச்சலும், கோபமும் கொண்டு உங்கள் இனத்தையே தீயிட்டுக் கொளுத்தி விடுகின்றனர்.

அந்த இடத்தில் அவர்களது சுயநலம்தானே அவர்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது.

அவர்களுக்கு நீங்கள் தேன் சேகரித்துக் கொடுக்கிறீர்கள் என்பதைக்கூட மறந்து நன்றியில்லாமல் நடந்து கொள்கின்றனர்.

உங்கள் விடயத்தில் மனிதர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்களே, அப்படியிருக்க அவர்களிடமிருந்து உங்களுக்கு முதல் மரி யாதை எப்படிக் கிடைக்கும்?” என்றது ஆந்தை.

ஆந்தையின் கூற்றைக் கேட்ட தேனீக்கள் மௌனமாகி, யோசிக்கத் தொடங் கின. பின்னர் ஆந்தை யார் காக்கைகளைப் பார்த்துப் பேசத் தொடங்கியது.

“காக்கையாரே! மனிதர்களிடையே ஒற்றுமை இல்லாதது போலவும் அந்த ஒற்றுமையை நீங்கள்தான் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது போலவும் பெரிதாகப் பீற்றிக் கொள்கிறீர்களே!

ஆனால், மனிதர்கள் உங்கள் விடயத்தில் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மனிதர்கள் தானியங்களைக் காய வைக்கும்போது நீங்கள் பறந்து வந்து தானிய மணிகள் சிலவற்றைக் கொத்தி எடுத்துச் செல்வது உங்களது வழக்கம்.

அது போலவே சிறுவர்கள் தங்கள் கையில் தின்பண்டம் வைத்திருந்தால் அதனையும் “லபக்” என்று கொத்திக் கொண்டு போய் விடுகிறீர்கள்.



மேலும், சில சமயங்களில் மனிதர்கள் மீது நீங்கள் உங்களது எச்சத்தைப் போட்டு விடுகிறீர்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மனிதர்கள் உங்கள் விடயத்தில் எப்படி நடந்து கொள்கின்றனர் தெரியுமா?

உங்களைக் கல்லால் அடித்துத் துரத்தி விடுகின்றனர்.

அப்படிப்பட்ட மனிதர்களிடமிருந்து உங்களுக்கு எப்படி முதல் மரியாதை கிடைக்கும்?” என்று கூறியது ஆந்தை.

ஆந்தையின் பேச்சைக் கேட்ட காகங்கள், மௌனமாகி, யோசிக்கவும் செய்தன.

பின்னர் ஆந்தை நண்பனான நாயை பார்த்து, “நாய் நண்பரே! நீ நன்றியுள்ளவன்தான் என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், உன் விடயத்தில் மனிதர்கள் நீ காட்டும் நன்றிக்கு மரியாதை தருகிறார்களா என்று எண்ணிப் பார்!

திருடனிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வ தற்காகவும், மற்றபடி வீட்டில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மனிதர்கள் உன்னைச் சங்கிலியால் கட்டிப் போட்டு உணவு கொடுத்து வருகின்றனர்.

காட்டில் வசித்து வரும் நாய்களுக்கு இருக்கின்ற சுதந்திரம் உனக்கு உண்டா? உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டாலோ அல்லது நீ யாரையாவது கடித்துவிட்டாலோ மனிதர்கள் உன்னைச் சும்மா விட்டுவிடுவார்களா?

அப்போது உன்னை இந்த மனிதர்கள் என்ன பாடு படுத்துவார்கள் என்பதை நீ நன்கு அறிவாய்! உனது விடயத்தில் மனிதர்கள் உன்னை மதிக்கவா செய்கின்றனர்? இல்லையே!

சுயநலமாகத்தானே நடந்து கொள்கிறார்கள்? ஆனால், நீயோ அவர்கள் உனக்கு முதல் மரியாதை தருவதாக நினைத்துக் கொண்டு, உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டு இருக்கிறாய்!” என்று தெளிவாகக் கூறியது ஆந்தை.

ஆந்தை கூறியதைக் கேட்ட நாயும் மௌனமாகி, யோச னையில் ஆழ்ந்தது.

“சரி... சரி... ஆந்தையாரே! இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டன தேனீயும், காகமும், நாயும்.

“நண்பர்களே! மனிதர்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக, சுறுசுறுப்புக்கு தேனீயையும், ஒற்றுமைக்கு காகத்தையும், நன்றிக்கு நாயையும் உதாரணமாகக் கூறுகின்றனர்.

இதுபோல இன்னும் சில விலங்குகளையும், பறவைகளையும் உதாரணமாக அவர்கள் காலங்காலமாக கூறி வருகின்றனர்.

எனவே, நம்மில் ஒவ்வொருவரிடமும் ஒருவிதமான திறமையும் பண்பும் உள்ளதை மனிதர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

ஆகவே, நம்மைப் பற்றி மனிதர்கள் என்ன பேசுகிறார்கள் சில சமயங்களில் அவர்கள் நம்மிடம் எவ்விதம் நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், எப்போதும்போல, நமது கடமைகளைச் செய்து வர வேண்டும். அதுவே நமக்குள்ள சிறப்பாகும்,” என்று கூறிவிட்டு, தன்னுடைய வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டது ஆந்தை.

அதனைத் தொடர்ந்து தேனீ, காகம், நாய் ஆகிய இம்மூன்றும் தங்கள் வேலையைக் கவனிக்கத் தொடங்கின. இதன் பின்னர் அவைகளுக்கிடையே வாதமோ, சச்சரவுகளோ, எழவில்லை. ஒற்றுமைக்கு உதாரணமாக, அவை வாழத் தொடங்கின. **(முற்றும்)**

## 12.2015 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639 - ஜெரிமையா ஹொரொக்ஸ் முதன் முதலாக வெள்ளிக் கோள் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.
- 1791 - உலகின் முதலாவது ஞாயிறு இதழ் தி ஒப்சேர்வரின் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1918 - முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் பிரான்ஸ் சென்றார். பதவியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஐரோப்பா சென்றது இதுவே முதற் தடவையாகும்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவின் எதிப்புத் தலைவர் யோசிப் டீட்டோ “ஜனநாயக யூகொஸ்லாவிய அரசு” ஒன்றை தற்காலிகமாக அமைத்தார்..
- 1971 - இந்தியாவுக்கும் பாக்கித்தானுக்கும் இடையில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை ஆராய ஐ.நா பாதுகாப்பு அவை அவசரமாகக் கூடியது.
- 1991 - ஐக்கிய அமெரிக்காவின் பான் ஆம் விமான சேவை தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.
- 1992 - ஐக்கிய அமெரிக்கா சோமாலியாவுக்கு 28,000 அமெரிக்கப் படைவீரர்களை அனுப்பியது.
- 2005 - ஹொங்கொங்கில் பல்லாயிரக்கணக்கானோர் ஜனநாயகம் வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புகள்

- 1875 - ரெய்னர் மரியா ரில்கே, ஆத்திரியக் கவிஞர் (இ. 1926)
- 1910 - ரா. வெங்கட்ராமன், 6வது இந்தியக் குடியரசுத் தலைவர் (இ. 2009)
- 1919 - ஐ. கே. குஜரால், 12 ஆவது இந்தியப் பிரதமர் (இ. 2012)
- 1963 - செர்கய் புப்கா, உக்ரைனிய தடியூண்டித் தாண்டும் விளையாட்டு வீரர்
- 1969 - ஜெய்-சி, அமெரிக்க ராப் இசைக் கலைஞர்
- 1982 - நிக் வோய்ச்சிச், ஆத்திரேலிய மதப் போதகர்

### இறப்புகள்

- கி.மு 530 - சைரசு, பாரசீகப் பேரரசை நிறுவியவர்
- 749 - தமாஸ்கஸ் நகர யோவான், சிரிய மதகுருவும், புனிதரும் (பி. 676)
- 1131 - ஓமர் கய்யாம்; பாரசீகக் கவிஞர், வானியலாளர், மெய்யியலாளர், கணிதவியலாளர் (பி. 1048)
- 1679 - தோமசு ஆபிஸ், ஆங்கிலேய மெய்யியலாளர் (பி. 1588)
- 1898 - க. சீ. கிருட்டிணன், இந்திய இயற்பியலாளர் (இ. 1961)
- 1976 - ந. பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (பி. 1900)
- 2014 - வி. ஆர். கிருஷ்ணய்யர், இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி, அமைச்சர் (இ. 1914)

# 24 ஆயிரத்து 341 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

**நாட்டில் கடந்த 11 மாத காலப் பகுதியில் 24 ஆயிரத்து 341 பேர் டெங்கு நோயினால் பாதிகப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல் தெரிவிக்கின்றது. இதில் அதிகூடிய எண்ணிக்கையினரான 6 ஆயிரத்து 345 பேர் கடந்த ஜனவரி மாதத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.**

கடந்த 11 மாதங்களில் தலைநகர் கொழும்பில் 7 ஆயிரத்து 978 பேர டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கடுத்தபடியாக 3 ஆயிரத்து 384 பேர் கம்பஹா மாவட்டத்திலும் யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 436 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாநகர சபைப் பிரிவில் மாத்திரம் குறித்த காலப்பகுதியில் 2 ஆயிரத்து 166 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவாகியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இதுகுறித்து மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் அவசர கவனம் செலுத்த வேண்டும் என கோரப்படுகின்றது.

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் அண்மைக்காலத்தில் சற்று மந்தகதியை அடைந்துள்ளன. அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் நடைபெற்று வந்த வாரத்தின் ஒரு நாள் துப்புரவுப் பணிகளும் தொடர்ச்சியாக நடைபெறாது தற்போது கைவிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் தினசரி கழிவகற்றல் பணிகளிலும் பல்வேறு பிரதேசங்களில் பாதிப்பேற்பட்டுள்ளது. வடிகான்கள் முறையாக உரிய காலத்தில் துப்புரவு செய்யப்படாததினால் நீண்ட காலத்திற்கு மழைநீர் தேங்கி நிற்கும் அவலம் காணப்படுகின்றது.

பாடசாலைகள், பாடசாலைகளுக்கருகிலுள்ள சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் குப்பை கூழங்கள் தினசரி அகற்றப்படாததினால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இதேபோன்று மக்கள் குடியிருக்காத வெற்றுக் காணிகளில் நாட்பட்ட குப்பை கூழங்கள் அகற்றப்படாது காட்சியளிக்கின்றன. இவை குறித்தும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகள அவசர கவனம் செலுத்த வேண்டுமென வும் கோரப்படுகின்றது. (இ-7-10)

# திருடர்களை விரைவில் கண்டுபிடித்து விடுவோம்



(கொழும்பு)

கடந்த கால திருடர்களை விரைவில் கண்டுபிடித்து விடுவோம். இப்போது கைவசம் 35 "பைல்கள்" உள்ளன. இவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

டுபாய் வங்கியில் 650 மில்லியன் டொலர்கள் யாருடையது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விரைவில் மேலும் பலரின் வங்கிக் கணக்கு தகவல்கள் வெளியில் வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 9 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் சுஜீவ சேனசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், திருடர்களை பற்றி பேசும் போது சபையில் பெரும்பாலானோர் மண்ணெண்ணெய் தாக்குதலுக்குள்ளான சாரப் பாம்புகளை போல் குழப்பமடைகின்றார்கள். ஏன் என்பது அவர்களது மனச்சாட்சிக்குத்தான் தெரியும். விரைவில் திருடர்கள் பிடிக்கப்படுவார்கள். ஆனால் சிறிது கால தாமதமாகும்.

ஏனென்றால் அனைத்து திருட்டுக்களும் சர்வதேசத்தரத்திலானவை. எனவே அவ்வாறான திருட்டுகளுக்கு தண்டனைகள் இல்லை. எனவே புதிய சட்டங்கள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து இணக்கப்பாட்டு அரசை ஏற்படுத்தி நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு புதிய மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகளை முன்னெடுக்கின்றனர் என்றார். (இ-7-10)

# 2020-ம் ஆண்டு வரையில் அரசை அசைக்க முடியாது

## பிரதியமைச்சர் துனேஸ் தம்பட்டம்

2020 ஆம் ஆண்டு வரையில் இந்த அரசாங்கத்தை அசைக்க முடியாது என பிரதி அமைச்சர் துனேஸ் கன்கந்த நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டுக்கு முன்னதாக அரசாங்கத்தை கவிழ்க்க எந்த கொம்பனாலும் முடியாது.

இந்த அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என சில தரப்பினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

எனினும், கடந்த அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கம் தலைக்கனத்துடன் செயற்படாது.

குறைகள் இருந்தால் அவற்றை திருத்திக் கொள்ள தயங்கப் போவதில்லை.

இதனை கோழைத்தனம் என எவரேனும் கருதினால் அதற்கும் பதிலளிக்க நாம் அஞ்ச மாட்டோம்.

சுத்தமான குடிநீர் கோரி போராட்டம் நடத்திய ரத்துபஸ்வல மக்களின் மூன்று உயிர்களைக் காவு கொண்டு கடந்த அரசாங்கம், மக்களின் கேள்விக்கு பதிலளித்திருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த அரசாங்கம் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாது என அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் துனேஸ் கன்கந்த தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## பதவி கர்வம்

ஒரே பள்ளிக்கூடத்தில் இரண்டு பேர் சேர்ந்து படித்தார்கள். அதில் ஒருவன் பின்னாளில் ஒரு பெரிய பதவிக்கு வந்து விடுகின்றான். இன்னொருவன் சாதாரண நிலைமையில் இருக்கின்றான்.

இவன் அவனைப் பார்ப்பதற்காக போகிறான். வாசலில் நிற்பவரிடம், "கூடப்படித்த சிநேகிதன் இன்னார் வந்திருக்கிறேன் என்று சொல்'' என்கிறான்.

அவன் உள்ளே போய்விட்டு வந்து, "ஐயா ரொம்ப பிஸியாக இருக்கிறார்... இப்பொழுது பார்க்க முடியாதாம். இன்னொரு நாளைக்கு வரட்டாம்'' என்று சொல்கிறான்.

இவன் பேசாமல் திரும்பிப்போய் விடுகிறான். இது சாதாரணமாக நடக்கக் கூடிய நிகழ்ச்சி. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? பதவிக் கர்வம்தான் காரணம்.

"பெருக்கத்து வேண்டும் பணிவு'' என்றார் திருவள்ளுவர். பதவி அதிகமாக-பணிவு அதிகமாக வேண்டும். அதுதான் பெருமை.

பதவிக் கர்வம் அந்த நிமிடத்தில் வேண்டுமானால் ஒரு சுகத்தைக் கொடுக்கலாம். பின்னர் அது ஒரு கட்டத்தில் அவமானத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்.

மகாபாரதத்தில் வரும் துருபதனே இதற்கு ஒரு நல்ல உதாரணம்! துருபதன்-பாஞ்சால தேசத்து அரசன்! துரோணர் ஏழை. பரத்வாஜ ஆச்சிரமத்தில்தான் இருவரும் சேர்ந்து படித்தார்கள். நல்ல நண்பர்களாக இருந்தனர்.

குருகுலவாசம் முடிந்தது! துருபதன் பாஞ்சால தேசத்தின் ராஜாவாகி விட்டார். ஆனால் துரோணரோ வறுமையால் மிகவும் கஷ்டப்பட்டார். தங்கள் குழந்தைக்கு பால் கொடுப்பதற்கு ஒரு பசு கூட இல்லாத நிலையில் தவித்தார்.

அவரின் மனைவி "ஏன் இப்படிக் கவலைப்படுகிறீர்கள்? துருபத ராஜா தான் உங்கள் சிநேகிதர் என்று சொல்கிறீர்களே! அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்!'' என்று அனுப்பி வைத்தார்.

துரோணரும் சரியென்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போனார். துருபதனைப் பார்த்தார். "நண்பா என்னை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?''என்றார். அப்பொழுது பதவிக்கர்வம் துருபதனின் கண்ணை மறைத்துவிட்டது!

"மூடேரே! ஏழை-பணக்காரரோடும், மூடன்- அறிவாளியோடும், பயந்தாங்கொள்ளி-சுத்த வீரனோடும் நட்பாக இருக்கு முடியுமா?'' என்று சொல்லி அவரை அவமானப்படுத்தி விட்டார்.

அதன் விளைவு என்ன ஆயிற்று தெரியுமா? காலம் மாறி விட்டது. துரோணர் அஸ்தினாபுரம் அரச குமாரர்களுக்கு ஆசிரியரானார்! அர்ச்சுனன் அவருடைய சிறந்த மாணவன் ஆனான். அவன் துருபதனை ஜெயித்து, அவனைத் தேர்க்காலில் கட்டி, துரோணரிடம் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறான்.

அர்ச்சுனன் துரோணருக்குக் கொடுத்த குருதட்சனை இது! இவர் கேட்டதும் இதைத்தான். பழைய நட்பை மறந்து துருபதன் இப்பொழுது தனது இராஜ்ஜியத்தை இழந்து அவமானத்தால் தலைகுனிந்து நிற்கிறான். அப்பொழுது துரோணர் சொல்கிறார்.

"உனது இராஜ்ஜியத்தில் அரைவாசியை நான் எடுத்துக் கொண்டேன். இதனால் இப்பொழுது நாம் இருவரும் சமம் ஆகிவிட்டோம்! இனிமேல் நாம் நண்பர்களாக இருக்கலாம்!'' என்கிறார்.

இந்தப் புராணக்கதை வெறுமனே படிப்பதற்கோ-கேட்பதற்கோ மட்டுமல்ல! நம்மை பக்குவப்படுத்திக் கொள்வதற்கே ஆகும். பஜ கோவிந்தத்தில் ஆதிசங்கர் "மா குரு தன ஜன யௌவன கர்வம்''என்கிறார்.

அதாவது உன்னுடைய பணத்தைப் பற்றியோ, ஜன ஆதரவை பற்றியோ, உன் இளமைப் பருவத்தைப் பற்றியோ கவலைப் படாதே. ஏனெனில் "காலம் எல்லாவற்றையும் ஒரு நொடியில் அழித்து விடும்!'' என்கிறார்.

இது புரியாமல் நடப்பதால்தான் பல சந்தர்ப்பங்களில் நாம் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் இருந்தார். தற்காலிகமாக அவருக்கு "தலைவர்'' பதவி கிடைத்து விட்டது. வேறு ஒன்றுமில்லை. ஒரு கூட்டத்துக்கு தலைமை தாங்கும் பதவி!

அதற்கே அவர் தன்னைப் பற்றி ரொம்பப் பெரிதாக நினைக்க ஆரம்பித்தார்.

ஒரு பேச்சாளர் எழுந்து வந்து "பெரியோர்களே! தாய்மார்களே!'' என்றார். உடனே தலைவருக்கு கோபம் வந்து விட்டது! "முதலில் தலைவர் அவர்களே என்று சொல்லுங்க!'' என்றார். உடனே பேச்சாளர்... "மன்னிக்க வேண்டும்! தவறுதலாக நான் தலைவரையும் பெரியோர்கள் லிஸ்டில் சேர்த்து விட்டேன்!'' என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

70

## சந்திரலேகா உருவானபோது

### வாசனுக்கு ஏற்பட்ட சோதனைகள்



எஸ்.எஸ்.வாசன் தயாரிப்பில் உருவான மங்கம்மா சபதத்தை டைரக்ட் செய்தவர் ஆச்சார்யா. எம்.டி. பார்த்த சாரதியும் ராஜேஸ் வரராவும் இசை அமைத்தனர். ஒளிப்பதிவு: கே.ராம் நாத்.

**பிரமாண்டமான படம்**

மங்கம்மா சபதத்தின் வெற்றியைத் தொடர்ந்து ஆங்கிலப் படங்களுக்கு இணையாக தமிழில் ஒரு பிரமாண்டமான படத்தைத் தயாரிக்க வாசன் திட்டமிட்டார். அதற்கான கதையை உருவாக்குவதில் ஜெமினி கதை இலாகா ஈடுபட்டது.

**அந்தப் படம்தான் சந்திரலேகா**

இதை தயாரிக்க பல ஆண்டுகள் ஆகும் என்பதால் குறுகிய காலத்தில் தாசி அபரஞ்சி மிஸ் மாலினி ஆகிய படங்களைத் தயாரித்தார் வாசன்.

இரண்டுமே வெற்றிப்படங்கள் தான். குறிப்பாக மிஸ் மாலினி மிகச் சிறந்த படம் என்று ஜெமினிக்கு பெயர் வாங்கிக் கொடுத்தது.

தமிழ்நாட்டில் பிறந்து ஆங்கிலத்தில் சிறந்த நாவல்களை எழுதி உலகப்புகழ்பெற்ற ஆர்.கே.நாராயண் எழுதிய மிஸ்டர் சம்பத் என்ற நாவல் தான் மிஸ் மாலினி என்ற பெயரில் படமாகியது.


ஏழைய இருந்து நாடகங்களில் நடித்து பிரபலமாகும் ஒரு நடிக்கையின் கதை. சம்பத் என்ற மோசடிப் பேர்வழியினால் அவர் வாழ்க்கை திசை மாறிச் சென்று மீண்டும் ஏழையாகிறாள்.

அவள் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த டைரக்டர் மீண்டும் அவள் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைக்கிறார்.

கதாநாயகி மாலினியாக புஸ்பவல்லியும் மோசடிப் பேர்வழி சம்பத்தாக கொத்தமங்கலம் சுப்புவும் நடித்தனர். பிற்காலத்தில் ஜாவர் சீதாராமன் என்று புகழ் பெற்ற சீதாராமன், டைரக்டர் வேடத்தில் அறிமுகமானார்.

ஜெமினியில் நடிக்க வருகிறவர்களை நேர்காணலில் சந்தித்து அவர்களைப் பற்றி குறிப்புகளை எழுதும் அதிகாரியாக வேலை பார்த்த ஆர்.கணேஷ் (பிற்காலத்தில் ஜெமினிகணேசன்) சிறிய வேடம் ஒன்றில் நடித்தார்.

காதல் இல்லாத படம் மிஸ் மாலினி (இதே கதையை பல ஆண்டுகளுக்குப் பின் மிஸ்டர் சம்பத் என்ற பெயரில் சோ படமாக்கி சம்பத்தாக நடித்தார்.



சந்திரலேகாவில் இடம்பெற்ற பிரமாண்டமான முரசாட்டம்

இந்த சமயத்தில் சந்திரலேகா திரைக்கதை தாயாராகிவிட்டது. படப்பிடிப்பு வேலைகள் சூடுபிடித்தன.

60 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிப்பதற்கு ஆகக் கூடிய மொத்த செலவு ரூ.2 லட்சம் தான்.

ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசன், ஆங்கிலப் படங்களுக்கு இணையாக சந்திரலேகாவைத் தயாரிக்கத் திட்டமிட்டார். 30 ரூபா லட்சத்துக்கு பட்ஜெட் போடப் பட்டது.

கதாநாயகன் எம்.கே.ராதா. கதாநாயகனுக்கு இணையாக வில்லன் வேடத்துக்கு ரஞ்சன். கதாநாயகி டி.ஆர்.ராஜகுமாரி.

மற்றும் என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், சுந்தரிபாய், எல்.நாராயணராவ் ஆகியோர் நடித்தனர்.

*(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 338

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...ஒருபோதும் மறக்காதீர்கள்... எல்லாம் பிரபஞ்ச இருப்புத் தன்மையைச் சேர்ந்தது.

நீங்கள் அதைத் தற்காலிகமாக வைத்திருக்கிறீர்கள். அவ்வளவுதான்.

உங்களிடம் எது இருப்பினும் இல்லாவிடினும் எப்பொழுதும் நன்றியுணர்வுடன் இருங்கள். அதுவே விடுதலை தரும் வாழ்விற்கான வழி.

இந்த ஒரு விடயத்தைப் புரிந்து கொண்டால் உங்களால் மாபெரும் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

இன்னொரு அருமையான சின்னக் கதை...

கடவுளும் உலகின் எல்லா விஞ்ஞானிகளும் சந்தித்து ஒரு போட்டிக்கு ஏற்பாடு செய்தனர்.

கடவுள் எதைச் செய்தாலும் விஞ்ஞானிகளும் ஏதோ ஒரு பொருளிலிருந்து அதை அப்படியே உருவாக்கினர்.

இறுதியாக கடவுள் மண்ணிலிருந்து மனிதனைப் படைத்து விஞ்ஞானிகளுக்கு சவால் விட்டார்.

விஞ்ஞானிகள் மண்ணை எடுக்கத் தொடங்கினர். கடவுள் சொன்னார், பொறுங்கள்! அதை உங்களுடைய மண்ணிலிருந்து செய்யுங்கள், என்னுடையதிலிருந்து அல்ல!

மனிதன் பிரபஞ்ச இருப்புத் தன்மையே படைத்தது, படைக்கப்பட்டது மற்றும் படைத்தல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் அவனால் விடயங்களை எந்தவித கவலையுமின்றி வெறுமனே அனுபவிக்கத் தொடங்க முடியும். அப்பொழுதுதான் அவனால் என்னுடையது என்பதையும் நான் செய்தேன் என்பதையும் கைவிட முடியும்.



அதனால் புரிந்துகொள்ளுங்கள்.... உங்களுடைய மனோபாவத்தை அதிருப்தி, கவலைகள், மனச்சோர்வு ஆகியவற்றைத் தேடுவதிலிருந்து நன்றியுணர்வுடன் நிகழ்காலத்தை தேடுவதை நோக்கி மாற்றியமைத்துக் கொண்டால் உங்களால் தானாகவே பிரபஞ்ச இருப்புத் தன்மையின் சக்தியை இன்னும் நன்றாக உபயோகப்படுத்திக்கொள்ள முடியும்.

பிறகு நன்றியுணர்வே உங்களுடைய மனோபாவமாகிவிடும்.

ஒரு சின்னக் கதை...

ஒருவன் அவன் மனைவிக்குக் காய்கறிகள் வாங்கி வர கடைத் தெருவிற்குச் சென்றான்.

அவன் வெண்டைக்காய் வாங்கிக் கொண்டுவந்து மனைவியிடம் காட்டினான். அதைப் பார்த்த மனைவி சொன்னான், ஓ! இவையெல்லாம் மிகவும் முற்றிப்போய்விட்டது. என்னால் இவற்றைச் சமைக்க முடியாது.

அவன் அடுத்த நாள் கடைக்குச் சென்று இந்தமுறை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுத்து கொஞ்சம் வெண்டைக்காயை வாங்கிக் கொண்டு வந்த மனைவியிடம் காட்டினான்.

மனைவி சொன்னாள், நீங்கள் என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? எல்லாம் மிகவும் பிஞ்சு; இதை வைத்துக்கொண்டு நான் நினைத்த உணவைச் செய்ய முடியாது.

அடுத்த நாள் அவன் கடைத் தெருவிற்குச் சென்று கடைக்காரனிடம் மிகவும் வேண்டிக்கேட்டுக் கொண்டான்,...

*(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

# லயமும் கானமும் ஒரே கருவியில்

மெண்டலின் சிவகுமாரின் லலித ஷேத்ரா" எனும் இசை ஒழுங் கமைப்பு நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக அற்புதமான-இத யத்தே ஆழப் பதிந்து நிற்கும் கர்நாடக சாஸ்திரீய இசை நிகழ்சி களை நடத்தி வருகிறது.

இதுவரை எமது நாட்டில் நடந் தேறாத-முற்றிலும் புதியதும், புது மையானதுமான நிகழ்ச்சிகள் நான்கு நிறைவேறி விட்டன. ஜனார்த்தனன் "saxovil fusion concert", விக்கு விநாயகராமின் "சதுர் கட லயசம ர்ப்பணம்", இராதாகிருஷ்னின்" scintillating strings" , ராக வேந்திராவின் "பிர ணவம்" போன் றவை ஆகும். இவை ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்து மற்றொன்று முற் றிலும் வேறுபட்டதே. இந்நிகழ்ச்சிக ளில் இந்தியாவின் பிரபல வித்து வான்கள, அணிசேர் கலைஞர்க ளாக பங்குபற்றியிருந்தனர்.

இத்தனை இசை நிகழ்ச்சிகளி லும் எமது ஈழத்து மென்டலின் கலைஞர் சிவகுமார் இணைந்து இசை வழங்கியது சிறப்பம்சமா கும். முதல் நிகழ்ச்சியில் உலக தவில் மேதை தட்சணாமூர்த் தியின் புதல்வர் உதயசங்கர் இணைந்து சிறப்பித்தமை குறிப்பிட த்தக்கது.

இந் நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டதன் நோக்கம்,கலைப் பொக் கிஷங்களை தன்னகத்தே கொண்டு உலக கலைஞர்களுக்கெல்லாம் அதனை வாரி வழங்கும் பொக் கிஷ பூமியான இந்தியாவில் இன்று இசை பல்வேறு பரிணாமங்க ளுடன் பாரம்பரிய சாஸ்திரீய சங்கீத வரம்பை மீறாது வளர்த்து கொண்டு வருகிறது.

உதாரணமாக, கடம், மிருத ங்கம் போன்ற பக்க வாத்தியங்கள் முதன்மை வாத்தியங்களக இசைக் கப்படுவதும், உப பக்க வாத்திய மான கடத்தை முதன்மை வாத்தி யமாக்கி அதில் நான்கு கடங்களை இணைத்து தாள வடிவமிசைத்தல், பத்து கடங்களை இணைத்து ஜல தரங்க வடிவில் இசைக்கும் கட தரங்", fusion concert வடிவம் போன்றவற்றை குறிப்பிடலாம். அத்துடன் விசேடமாக வடிவமை க்கபபட்ட இரட்டை வயலின் (double violin), 5தந்திகளை உடைய வயலின், இரட்டை கெஞ்சிரா போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

இத்தகைய மாற்றங்களுட னான கச்சேரிகளை அங்கு சென்று பார்ப்பதற்கும், அவை பற்றி தெரிந்து கொள்வதற்கும், அம் மாற்றங் களை உருவாக்கிய ஜாம்பவான் களை நேரில் சந்திப்பதற்கும் இய லாத மாணவர்களுக்கும், இசை ஆர்வலர்களுக்கும் இத்தைகைய கச்சேரிகளை இலவசமாக வழ ங்கி, மாணவர்களை அவை பயில ஊக்குவிப்பதே இந் நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

இந் நிகழ்ச்சிகள் அனைத்தும் அனுசரணையாளர்களின் உத வியுடன் கொழும்பிலும், யாழ்ப் பாணத்திலும் இலவசமாகவே நடைபெற்று வருகின்றன.

இவர் இசை உலகின் மிகப் பிரபலமான வித்துவான்களுக்கும், வித்வாம்சினிகளுக்கும் கடத்தினை பக்கவாத்தியமாக வாசித்து புகழ் பெற்றுள்ளார். இசை மேடையில் ஐந்தாவது இடத்தில் இருந்த கட வாத்தியத்தினை முதல் இடத்தி ற்குக் கொண்டுவந்து , இசை உல கில் ஓர் புரட்சியையும் ஏற்படுத்தி உள்ளார். லயவாத்தியமான கடத்தில் இசையை வாசிக்கும் "கட த்ரங்" எனும் புதிய முறையை கையாண்டு உருவாக்கிய வடி வமே "லய ராக சமர்ப்பணம்".இந் நிகழ்ச்சி பல நாடுகளிலும், மேடை களிலும் ரசிகர்கள் வியந்து பாராட்டிய ஓர் நிகழ்ச்சியே!

பல ராகங்களில் , பல தாளங் களில் கட தரங்கிற்கு ஏற்றவாறு பல மெட்டுக்களை அமைத்து வாசிக் கிறார் . "ஸ்திரீ தாள் தரங்" என்ற பெண்கள் அடங்கிய குழுவின ருடன் பல நாடுகளிலும் வாசித்து பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார். இப்பொழுது ஓர் புது முயற்சியாக மென்டலின் வாத்தியத்துடன் கட தரங் நிகழ்ச்சி அவர் நடத்த இரு ப்பதும் இதுவே முதன் முறையா கும்.




கட தரங் என்பது ஜலதரங்கம் போன்றதொரு அமைப்பை உடை யதாகும் . ஒவ்வொரு இராகத்தின் ஆரோகணம், அவரோகணத்திற் க்கு ஏற்றவாறு கட வாத்தியங்களை தேர்ந்தெடுத்து, வித விதமான மெட டுக்களை வாசிக்கும் ஓர் புது மையான முயற்சியாகும் .

மென்டலின் சிவகுமார் , வய லின் ஜ்யோத்ஸ்னா மஞ்சுநாத் இருவரும் இசைக்கும் பாடல்களு க்கு பக்கவாத்தியமாக லய கலா விபஞ்சி- .என்.இராமகிருஷ்ணனும் மிருதங்கம் திருமதி சுகன்யா இராம் கோபாலும் கடம்திருமதி . பாக்யலக்ஷ்மி கிருஷ்ணா மோர்ச ിங்குடன் இணைந்த ஒரு இனி மையான இசை விருந்தாகும்.

கட தரங் மெட்டுக்கள் வாசிக் கும் போது அதனுடன் மற்ற வாத்தி யங்கள் பக்க வாத்தியமாக இணையும்.

கட தரங்கில் தாளம், பாடல், வெவ்வேறு நடைகளில் கற்பனா ஸ்வரங்களின் மூலம் கேள்வி கேட்க, மற்ற வாத்தியங்களில் அதற்கு தகுந்தவாறு பதில் அளித்து இறுதியில் ஒரு பெரும் முத்தாயிப் பாக ஒலிக்கும்.

இதைத் தொடர்ந்து மிருதங் கம், கடம், மோர்சிங் வாத்தியங் களின் தனி ஆவர்த்தனம், கொன் னக்கோல் உங்கள் அனைவரது உள்ளத்தைக் கொள்ளை கொள் ளும் என்பதில் எள்ளளவும் சந்தே கம் இல்லை.

இசை கற்கும் மாணவ மாண விகளுக்கு அரியதொரு வாய்ப்பு. இத்தகைய புதுமையான நிகழ்ச் சியை எங்கும் கண்டும் கேட்டும் இருக்க முடியாது.

இந்த அருமையான வாய்ப் பினை தவற விடாமல் அனைவ ரும் வந்து அரியதொரு இசை விருந்தினை கண்டு களிக்கவும்.

திருமதி.த.சிதம்பரநாதன்
ஓய்வுநிலை விரிவுரையாளர்,
ஆசிரியர் பயிற்சிக்
கலாசாலை,
கோப்பாய்.

மெண்டலின் சிவகுமாரின் லலிதஷேத்ரா இரண்டாம் ஆண்டு விழா இன்னிசை நிகழ்ச்சி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இம் மாதம் நடைபெறவுள்ளது. இதற்கமைய நாளை சனிக்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பூநாறி மடத்தடியில் உள்ள செல்வமஹால் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. லய ராக சமர்ப்பணம் என்ற தொனிப் பொருளில் இவ் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 564

Search for people, places and things Nagendram Home

**வேந்தன்**



தண்ணில மிதந்து தண்ணிக்கு மேலயும் மிதப்பவன் தான் ஆம்பிள

**தியாகேஷ்**




**இன்பகுமார்**




**தேவிதன்**




ஒரு மணி நேரத்திற்கு வாடகை சைக்கிள் எடுத்து ஓட்டிய சந்தோசம், சொந்தமாக பல்சர் வாங்கி ஓட்டும் போது கூட வருவதில்லை

**துவாரகன்**



டேய் டேய் முடியலடா இது ரொம்ப ஓவர்டா


**ஜமுனா**



இப்படியொரு குறை தன் மகளுக்கு இருப்பது தெரியக்கூடாது என்பதற்காக நியூசிலாந்தைச் சேர்ந்த பாசக்காரத் தந்தை மொட்டை அடித்துக் கொண்டு அந்த கருவி போன்றே 3D யில் பச்சை குத்திக் கொண்டார்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அக்கறை கொள்ளவில்லை



எதிர்க்கட்சி தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள தமிழத் தேசியக் கூட்டமைப்பு நாட்டின்மீது அக்கறை கொண்டிருக்கவில்லை என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனை தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பிரதேசத்தை மாத்திரம் அடிப்படையாக் கொண்டு செயற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் வட பகுதிக்கு ஏதேனும் நன்மை கிடைக்கின்றதா என்பதை மட்டுமே பார்த்து தமிழத் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை 2016ஆம் ஆண்டுககான வரவு செலவுத் திட்டம் நாட்டின் எதிர்காலத்திற்கு பாதிப்பானதாக காணப்படுகின்ற போதிலும் நாட்டின் மீது அக்கறையின்றி தமிழ்த தேசியக் கூட்டமைப்பு வாககளித்துள்ளதாக சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-64)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 03.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 140.95 | 145.28 |
| பவுண்ட் | பிரிட்டன் | 209.59 | 217.69 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 148.35 | 154.83 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 137.25 | 143.47 |
| டொலர் | கனடா | 104.83 | 109.51 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.84 | 106.94 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.30 | 103.43 |
| ரூபா | இந்தியா | 2.1491 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.4297 |
| குவைத் | டினார் | 470.3836 |
| ஓமான் | ரியால் | 371.8858 |
| கட்டார் | ரியால் | 39.3521 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1773 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.0054 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 150 | 150 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 550-650 | 610 | 650-800 | 800 | 700 |
| தக்காளி | 180 | 240 | — | 160 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 20 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 160 | — | 160 | 200 | 140 |
| கரட் | 180 | 250-400 | 180 | 200 | 200 | 180 |
| பூசணி | 60 | 40 | 35 | 40 | 60 | 40 |
| புடோல் | 140 | 120 | 100 | 140 | 160 | 140 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 80-140 | 120 | 100 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 85-130 | 85 | 110 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 250 | 200 | 300-400 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 100 | 120 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 250 | 160 | 200 | 200-240 | 200 | 300 |
| லீக்ஸ் | 180 | 170 | 150 | 160-200 | 200 | 150 |
| பீற்றூட் | 120 | — | — | — | 200 | 80 |
| கறிமிளகாய் | 400 | — | — | 600-800 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 400 | — | 200 | — | 320 | — |
| போஞ்சி | 220 | — | — | — | 200 | 300 |
| குத்தரிதம்புள்ள | 100 | 100 | 120 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 60 | 50 | — | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 200 | 200-250 | — | 300 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 300 | — | 150 | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | — | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | — | — | 30 | 30 | 50 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | 40 | 50 | 100 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 1977 தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி 44

### துப்பாக்கிச்சூடு

மறுநாள் பொலிஸார் பெரும் கூட்டமாக வந்து கலவரம் செய்தனர். பொது மக்களைக் கண்மூடித்தன மாகத் தாக்கினர்.

15 ஆம் திகதி மீண்டும் பொலிஸார் அட்டூழியம் செய்ததால் பெரிய அளவில் கலவரம் வெடித்தது. பொது மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் 4 பேர் பலியானார்கள். 20 பேர் படுகாயமடைந்தனர்.

16 ஆம் திகதியும் பொலிஸ் அராஜகம் தொடர்ந்தது. தமிழர்களின் கடைகளுக்குத் தீ வைத்தனர். 17 ஆம் திகதி யாழ்ப்பாணம மார்க்கெட்டையே தீ வைத்துக் கொளுத்தி நாசப்படுத்தினார்கள்.

### அமிர்தலிங்கம்

கலவரப்பகுதியை அமிர்தலிங்கம் பார்வையிட்டார். அப்பாவி மக்கள் மீது ஏன் சுடுகிறீர்கள்? என்று பொலிஸாரைப் பார்த்துக் கேட்டார்.

பொலிஸார் அவரையும் தாக்கினார்கள்.

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களைத் தமிழர்கள் தாக்குகிறார்கள் என்று அனுரார்தபுரத்தில் வதந்தி பரவியது. திட்டமிட்டு இந்த வதந்தியைப் பரப்பியவர்கள் சிங்களவர்கள் தான்.

அங்கும் கலவரம் வெடித்தது. தமிழர்களின் வீடுகளும் கடைகளும் கொளுத்தப்பட்டன.

அனுராதபுரத்தில் மூண்ட கலவரம் இலங்கையில் மற்ற இடங்களுக்கும் பரவியது.

### பாராளுமன்றத்தில் வாக்குவாதம்


இந்தப்பிரச்சினை பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் அநியாயமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். ஏன் சுட்டீர்கள் என்று கேட்ட என்னையும் தாக்கினார்கள். நான் உயிரோடு இந்த சபை முன் நிற்பதே ஆச்சரியம் என்று அமிர்தலிங்கம் கூறினார்.

இதற்கு ஜெயவர்த்தனா ஆவேசத்துடன் பதில் அளித்தார்.

திருகோணமலையைத் தலைநகராகக் கொண்டு தன் நாடு அமைக்கப்போவதாக நீங்கள் பேசி வருகிறீர்கள். அதனால் பொதுமக்கள் (சிங்களவர்கள்) ஆத்திரம் அடைகிறார்கள். சண்டை போட விரும்புகிறீர்களா? வாருங்கள், சண்டை போடுவோம்! சண்டை என்றால் சண்டை, சமாதானம் என்றால் சமாதானம் என்றார் ஜெயவர்த்தன.

இதைக் கேட்டு சிங்கள எம்.பி.க்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.




### 112 பேர் பலி

ஜெயவர்த்தனவின் பேச்சு எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியது போலாயிற்று.

தமிழர்கள் மீது தாக்குதல் அதிகமாயிற்று. பலர் வெட்டிக் கொல்லப்பட்டனர். தமிழர்களின் வீடுகளும் கடைகளும் எரித்து சாம்பலாக்கப்பட்டன.

1977 ஆகஸ்ட் மாதம் நடந்த கலவரங்களில் 112 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 25 ஆயிரம் பேர் வீடு-வாசல் இழந்தனர். 100கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உமா மகேஸ்வரன் இணைந்தார். கட்சி மாறிய தமிழ் எம்.பி. கனகரத்தினத்தைப் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் சுட்டுக் கொன்றனர்.

தங்கதுரை பிரபாகரன் போன்ற போராளிகளை அமிர்தலிங்கம் அடிக்கடி சந்திப்பது வழக்கம். 1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடந்த ஒரு சந்திப்பின் போது உமா மகேஸ்வரனை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டார்.

உமா மகேஸ்வரனின் இயற்பெயர் நல்லைநாதன். பிரபாகரனைக் காட்டிலும் 10 வயது அதிகம். கொழும்பு தமிழ் இளைஞர் பேரவையில் கொழும்பு கிளைத் தலைவர். ஆங்கிலத்தில் ஆற்றல் மிக்கவர். இது இயக்கத்திற்குக் கூடுதல் பலம் சேர்க்கும் என்பதால் அமிர்தலிங்கத்தின் யோசனையைப் பிரபாகரன் ஏற்றுக் கொண்டார்.

### தலைவர் பதவி

அதுவரை 5 பேர் கொண்ட மத்தியக் குழுவின் தலைவராகவும் இராணுவத் தளபதியாகவும் பிரபாகரனே இருந்து வந்தார். உமா மகேஸ்வரன் இயக்கத்தில் சேர்ந்ததும் அவருக்குத் தலைவர் (சேர்மன்) பதவியை வழங்கிவிட்டு இராணுவப் பொறுப்பை மட்டும் பிரபாகரன் வைத்துக்கொண்டார்.



(தொடரும்)

# தேசிய தொழில் தகைமையின் ஊடாக தொழில் உலகிற்கு

இன்றைய தொழில் உலகிற்குள் பிரவேசிக்க முனையும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் மிகவும்அவசியமானதாகும்.தொழில் ரீதியான தகைமை என்பது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊடாக தாம் விரும்பும் தொழிற்றுறையில் தமது தகுதியை உறுதிப்படுத்திக் கொள்வதைக் குறித்து நிற்கிறது.

இலங்கையில் தொழிற் பயிற்சி ரீதியான கல்வி முறைக்கு அரசின் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன அமைப்புகளில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையும் ஒன்றாகும். இது திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சின்கீழ் நிறுவப்பட்ட அமைப்பாகும்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 07 தேசிய தொழிற்பயிற்சி நிலையங்களையும் 22 மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களையும் 236 தொழில் பயிற்சி நிலையங்களையும் உள்ளடக்கியதான கட்டமைப்பைக் கொண்டு இயங்கி வருகின்றது. இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையானது சர்வதேச நிபுணத்திற்கு சமனாகப் பொருந்தக்கூடிய திறன் மிக்கவர்களை உருவாக்கும் வகையில்கைத்தொழில், கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் ஒரு முதற்தர நிறுவனமாக இருத்தல் என்ற பணிநோக்கினை முன்னிலைப்படுத்தி இயங்கி வருகின்றது.

இந்த வகையில் தொழில் வாய்ப்பை மையமாகக் கொண்டு வாழ்க்கை தொழிற்பயிற்சிகளை செயற்படுத்துதல் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் என்ற தனது குறிக்கோளை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக பாடசாலையை விட்டு இடைவிலகிய மற்றும் உயர் கல்வி வாய்ப்புக்கான வாய்ப்பினை இழந்த இளைஞர், யுவதிகளைத் தனது இலக்குக் குழுக்களாகக் கொண்டு அவர்களுக்கு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி நெறிகளைக் கற்பித்தல், தொழில் வழிகாட்டல், சேவைகளை வழங்குதல் தொழிலுக்கமர்த்தல் ஆகிய செயற்பாடுகள் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஒரு மாவட்ட மட்ட பயிற்சி நிலையத்தினையும் 8 தொழிற்பயிற்சி நிலையங்களையும் உள்ளடக்கிய அமைப்பாக இயங்கி வருகிறது. மாவட்ட அலுவலகமானது இல.12, கே.கே. எஸ். வீதி (வீரசிங்கம் மண்டபம்) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வருகிறது. பயிற்சி நிலையங்களானவை காரைநகர், கைதடி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், சுன்னாகம், வல்வெட்டித்துறை, சண்டிலிப்பாய், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் இயங்கி வருகின்றன.

இப்பயிற்சி நிலையங்களில் 4 வகையான தொழிற் பயிற்சி நெறிகள் ஒரு வருட கால அளவைக் கொண்டவையாகவும் மற்றும் 14 வகையான பயிற்சி நெறிகள், 06 மாத கால அளவைக் கொண்டவையாகவும் நடத்தப்படுகின்றன. எனினும் அனைத்துப் பயிற்சி நெறிகளும் 06 மாத கால அளவு வேலையுடன் கூடிய பயிற்சி நெறிகளை உள்ளடக்கிய பாடவிதானங்களைக் கொண்டவையாகும். வேலையுடன் கூடிய பயிற்சியினை பூரணப்படுத்தியவர்களுக்குதேசியதொழில்தகைமை சான்றிதழ் வழங்கப்படும்.

கணனிப்பிரயோக மென்பொருள், வீட்டு மின்னிணைப்பாளர், தையல், காய்ச்சி இணைத்தல், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், மோட்டார் சைக்கிள் திருத்துதல், முச்சக்கர வாகனம் திருத்துதல், பரிமாறுபவர், பராமரிப்பாளர், சமையலாளர், வெதுப்பாளர், மேசன் தொழில் நுட்பம், அலுமினியம் பொருத்துநர், அழகுக்கலை வல்லுநர், சிகையலங்காரம், மரவேலை தொழில்நுட்பவியலாளர். குளிர்சாதன உபகரண திருத்துநர், டீசல் வாகன இயந்திர திருத்துநர், முன்பள்ளி ஆசிரியர், நீர்க்குழாய் பொருத்துநர், மின் மோட்டார் மீள் முறுக்குநர், உதவி கணிய அளவையியலாளர், படவரை கலைஞர், பிரத்தியேகசெயலாளர்,கணனி படவடிவமைப்பாளர், கணனி வன்பொருள்திருத்துநர் ஆகிய பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

வழங்கப்படும் அனைத்துப் பயிற்சிநெறிகளும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பாட விதானங்களை உள்ளடக்கி அமைவதால் தொழிற்றகைமை சான்றிதழுக்கு உரிய தகுதியைக் கொண்டவையாகும்.

**த.சுரேஸ்குமார்**
**இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை,**
**யாழ்ப்பாணம்.**

# நாமும் உங்களில் ஒருவரே

சரவதேச வலுவிழந்தோர் தினத்திலாவது எங்களையும் சற்றே நினைத்துப் பாருங்கள்.

நாங்களும் இந்த உலகத்தில் தான் வாழ்கின்றோம். உங்களோடு ஒன்றாக கலந்து இந்த சமூகத்தில் தான் வாழ்கின்றோம். எத்தனை பேருக்குத்தான் தெரியும்? எத்தனையோ வலுவிழந்த பிள்ளைகள் தங்களின் வீட்டினுள்ளேயே மூடங்கிக் கிடப்பது. தங்களின் ஆசைகளையும், ஏக்கங்களையும் மனதினுள்ளேயே பூட்டி வீட்டினுள் ஒரு மூலையில் முடங்கிக்கிடப்பது. இதன் நிமிர்த்தம் என்ன கிடைக்கப்போகின்றது. அந்தப்பிள்ளைக்கு இயலாமையுடன் சேர்ந்து மன அழுத்தமும் தான் ஏற்படப் போகன்றது. ஏன் இவர்கள் என்ன கடவுளால் சபிக்கப்பட்டு இப் பூமியில் பிறந்தவர்களா? வேற்றுக்கிரக வாசிகளை வேடிக்கை பார்ப்பது போல் எம்மை சிலர் வேடிக்கை பார்க்கின்றார்கள்.

நாம் இந்த உலகில் வாழ உரிமை அற்றவர்களா? எங்களையும் உங்களில் ஒருவராக நினைத்து நடத்தித்தான் பாருங்களேன். உங்களின் உடலில் ஓடும் அதே இரத்தம் தானே எங்களின் உடலிலும் ஓடுகின்றது. இறைவன் எங்களை இப்படி படைத்தது என்று நாங்கள் கவலைப்பட வழியில்லை. ஆனால் இந்த சமூகத்தில் வாழும் மக்கள் எங்களை கண்டவுடன் அவர்களின் பார்வைகள் தான் எம்மை இந்த சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழ செயது விடுகின்றது.

சில சமயங்களில் நீங்கள் எங்களை பார்க்கும் பார்வைகளும், பேச்சுக்களும் தான் கடவுள் எம்மை இப்படி படைத்து விட்டாரே என எண்ணி கலங்கவைக்கிறது. உங்களின் பார்வைகள் எம்மையும் இச்சமூகத்திற்கு முன்னால் தூக்கி நிறுத்தும் பார்வைகளாக இருக்கட்டும்.

இன்று காணப்படும் சூழலில் வலுவிழந்தவர்களின் நிலை குறித்து பார்ப்போமாயின் அவர்களுக்கு சமவுரிமை என்பது கிடைப்பதில்லை. ஆனாலும் இன்று வலுவிழந்தவர்கள் பற்றிய சில விழிப்புணர்வுகள் மக்களிடையே பரவலாக ஏற்பட்டு வருவதனால் சில உலக நாடுகளும் எமது நாடும் எம் பக்கம் திரும்பியுள்ளார்கள்.

இன்று சமூகத்தில் ஒரு சில செயற்பாடுகளினால் அவர்கள் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்பட்டாலும் அவர்களின் அத்தியாவசிய தேவைகள் அரசாங்கத்தினால்நடைமுறைக்கு கொணடு வரத்தான் முடியவில்லை. தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், வானொலிகள் இன்னும்பல ஊடகங்கள் மூலமாக வலுவிழந்தவர்களின் பிரசசினைகள் தீர்க்கப்படுவதில்லை என்று தான் கூற வேண்டும்.

உதாரணமாக வைத்தியசாலைகளை நாம் எடுத்து நோக்கும்போது, எத்தனையோ விதமான மருத்துவ வசதிகள வந்தும், கட்டடங்கள் மாடி மாடியாக உயர்ந்துசென்றாலும் எம்முடைய தேவைகள் பூர்த்தியாவது இல்லை. ஒரு கால் இல்லாத மாற்றுத்திறனாளி வைத்தியசாலைக்கு செல்வதாயின் எவ்வாறு செல்வது. படிகளில் அவர்களால் ஏறத்தான் முடியுமா? வைத்தியசாலைகளிலேயே எமக்கு இந்த உரிமைகள் கிடைப்பதில்லை. அதேபோன்று வைத்தியசாலைகளின் குளியல் அறைகளில் போதிய வசதி காணப்படுவதில்லை. போலியோ அல்லது இரு கால்களையும் இழந்த ஒருவரினால் நின்று கொண்டுதனது தேவைகளை பூர்த்தி செய்யத்தான் முடியுமா? அவர்கள் இருந்து குளிப்பதற்கு அங்கு எந்த வசதிகளும் செய்து கொடுப்பதில்லை.

அதேபோன்று கேட்டல், பேச்சுத்திறன் இல்லாத ஒருவர் வைத்தியசாலைக்குச் செல்லத் தான் முடியுமா? அங்கு இருக்கும் எத்தனை வைத்தியர்களுக்கு சைகை மொழி தெரியும்? இப்படி இருக்க எப்படி ஒரு பேச இயலாத நபரிடம் அந்த வைத்தியர் அவரின் நோயை அறிந்து கொள்வார். அங்கும்அந்த நபரின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

அதே போன்று அரசாங்க நிறுவனங்களான பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் , வைத்தியசாலைகள் இவை எல்லாம் மக்களின் அன்றாட வாழ்வோடு மிகவும்தொடர்புபட்டவை. ஆனால் இங்கெல்லாம் மாற்றுத்திறனாளிகளுக்கு போதிய உரிமைகள் கிடைப்பதில்லை.

இவற்றுக்கான தீர்வை இந்த சமூகத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் கட்டாயமாக செயற்படுத்த வேண்டும். விசேடமாக அரசாங்க நிறுவனங்களிலேயோ, அல்லது தனியார் நிறுவனங்களிலேயோ, தொழில் புரியும் ஒவ்வொருவரும் கட்டாயமாக சைகை மொழியை கற்றிருக்க வேண்டும். விசேடமாக ஒவ்வொரு வைத்தியரகளும்கட்டாயமாக சைகை மொழியை கற்றிருக்க வேண்டும்.அதே போன்று மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுப்பதில் ஒரு சில நிறுவனங்கள் தான் முன்வந்துள்ளன. ஏன் மாற்றுத்திறனாளிகள் எனும்போது அவர்களை ஏன் ஒரு இயலாதவர்களாக பார்க்கின்றீர்கள்? அவர்களின் உடலில் இருக்கின்ற குறைகளையும், வெளித்தோற்றத்தையும் மட்டும்பார்க்கின்றீர்கள். அவர் களுக்குளளும் அநேகமான திறமைகள் சாவி போட்டு பூட்டப்பட்டிருக்கின்றன.

வெளியில் வந்தால் எமையாரும் ஏதும் சொல்லி விடுவார்கள், எம்மால் என்ன செய்ய முடியும் என்று சில மாற்றுத்திறனாளிகள் வீட்டினுள்ளேயே முடங்கிக்கிடந்து விடுகின்றார்கள். வீட்டில் இருக்கும் தடைகளையும் தாண்டி தங்களின் இயலாமையை தூக்கிப்போட்டு விட்டு வெளி உலகிற்கு வரும் மாற்றுத்திறனாளிகளில் ஒரு சிலரே சமூகத்துடன் இணைந்து வாழ்கின்றார்கள். மீண்டும் சிலர் இருந்த பழைய நிலைக்கே சென்று விடுகின்றார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கும் சிறிது சந்தர்ப்பம் கொடுத்துத்தான் பாருங்களேன் .

மாற்றுத்திறனாளிகளான எங்களையும் சற்றே நினைத்து எங்களையும் உங்களையும் போலவே எண்ணுங்கள். "ஒரு இடத்தில் குறை இருக்கும்போது தான் அங்கு நிறைவும் பிறக்கின்றது. நான் குறைகளை மட்டும் தான் சொல்கிறேன் என்று நினைக்கின்றீர்களா? மாற்றுத் திறனாளிகளுக்காக நீங்களும், அரசும் ஏனைய நிறுவனங்களும் செய்யும் உதவிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை கூறுகின்றேன். அத்துடன் மேலே குறிப்பிட்ட எம்முடைய அத்தியாவசிய தேவைகளையும் சற்று கவனத்திற்கு எடுக்கும் படி கூறி நிற்கின்றேன்.

வேதநாயகம்
பிரசில்லா றாதிகா
வலுவிழந்தோர்
புனர்வாழ்வுச் சங்கம்,
திருநெல்வேலி

# செய்தித் துளிகள்


## விஞ்ஞானி அப்துல் கலாமின் நினைவாக கட்டுரைப் போட்டி

சர்வதேச மாணவர்கள் மத்தியில் மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் விஞ்ஞானி அப்துல்கலாமின் நினைவாக தமிழினி பத்திரிகை கட்டுரைப்போட்டி நடத்துகின்றது.

இப்போட்டியில் 25 வயதுக்குட்பட்ட மாணவர்கள் அறிவு மலை அப்துல்கலாம் என்ற தலைப்பில் கட்டுரைகளை தட்டச்சில்/ கணனியில் (A4 Size) 5 பக்கங்களுக்கு மேற்படாது இருப்பதுடன் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக தமிழினி, C/O தாயக ஒலி, 9-2/1, நெல்சன் இடம், கொழும்பு-06 என்ற முகவரிக்கு கடவுச்சீட்டு அளவிலான புகைப்படத்துடன் அனுப்புமாறு குழுவினர் அறிவித்துள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 011 236 4124 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## 13 வயது மாணவனின் சாதனை



களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயது மாணவன்லக்ஷ்மன் குமார சிறிவர்த்தன சூழலிலுள்ள கழிவுப்பொருட்களையும் தந்தையின் பழைய சைக்கிள் ஒன்றையும் பயன்படுத்தி கார் ஒன்றை உருவாக்கியுள்ளார். குறித்த மாணவனின் இக் கண்டுபிடிப்புக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மாணவனின் கண்டுபிடிப்பு தங்கள் பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளது என பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இவ்வாறுபலபுதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வது தனது எதிர்கால கனவு என மாணவன் தெரிவித்தார். (இ

## உவர் தண்ணீரை அருந்திய மாடு உவர்ப் பாலா கறக்கும்?

யாழ். மாவட்டத்தில் வீடுகளுக்கு பால்விநியோகம் செய்யும் ஒருவர் அண்மையில் விநியோகம் செய்த பாலை காய்ச்சிகுடித்தவர்கள் பாலில் உவர்ப்புத்தன்மை காணப்படுவதை உணர்ந்து அது தொடர்பில் பால் விநியோகிப்பவரிடம் விசாரித்துள்ளனர்.

தனது மாடு முதல் நாள் உவர்த் தன்மையுடைய நீரை அருந்தியமையால் அடுத்த நாள் கறந்த பாலில் உப்புத் தன்மை ஏற்பட்டுள்ளதாக பால் விநியோகிப்பவர் தெரிவித்தார்.

மேற்படி நபர் விநியோகிக்கும் பால் பொங்குவது இல்லையெனவும் உவர்ப்புத்தன்மை ஏற்பட்டதையடுத்து அவர் பாலில் தண்ணீர் கலக்கின்றார் என்பதை ஊகிக்கக் கூடியதாக உள்ளது என அவரிடம் பால் வாங்கியோர் கூறியுள்ளனர். (இ

## 500 ரூபா நாணயம் விரைவில்


(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நடைபெறவுள்ளதாகவும் இதற்காக அன்றைய தினம் இலங்கை மத்திய வங்கியால் 500 ரூபா நாணயம், நினைவுத்தபால் முத்திரை என்பன வெளியிடப்படவுள்ளதாக கொழும்பு மாநகர சபை மேஜர் தெரிவித்தார்.

உலகின் பல நாடுகளிலுமுள்ள மேயர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ள இந்நிகழ்வு எதிர்கால நகரங்கள் எனும் தலைப்பில் இடம் பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இம் மாதம் 14 ஆம் திகதி கொழும்பு மாநகர சபை வளாகத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மேயர்களாகவிருந்த முன்னாள் ஜனாதிபதிகள், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர்கள் மற்றும் அரச பதவிகளை வகிக்கும் மாநகர சபை அங்கத்தவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# 70 ஆண்டுகளை நிறைவு செய்த ஐக்கிய நாடுகள் சபை




உலகில் உயர்ந்த நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபை எழுபது ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் அதன் செயற்பாடுகளை சிறிது நினைவு கூறுவோம்.

மனித வரலாறு எண்ணிலடங்காத யுத்தங்களையும் சந்தித்தபோதும் முதலாவது உலகமகா யுத்தம் 1914 தொடக்கம் 1918 வரை நடைபெற்றது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையேயான காலனித்துவப் போட்டியே யுத்தத்திற்கு காரணமாகின்றது.

அத்தோடு யுத்தம் புரட்சியைக் கொண்டுவரும் என்ற வகையில் 1917 இல் ரஷ்யாவின் ஒக்டோபர் புரட்சியை அடுத்து 1918 இல் யுத்தம் நிறைவுற்றது.

யுத்தத்தையடுத்து நாடுகளுக்கு இடையே அமைதி காக்கும் நோக்கில் "நாடுகளின் சங்கம்" என்ற அமைப்பு உருவானது.

இருந்தும் 20 வருடங்களின் பின் இரண்டாவது உலகமகா யுத்தம் 1939 இல் ஆரம்பித்து 1945 இல் முடிவுற்றது.

பேரழிவுகளை ஏற்படுத்திய இந்த யுத்தம் ஏற்படுவதற்கு ஏகாதிபத்தியப் போட்டி பொருளாதார மந்தம், இனவாதம் என்பன காரணங்களாகும்.

ஜேர்மனில் 1933 இல் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிட்லரின் தேசிய சோஷலிசக் கட்சி 1936 இல் ஆட்சியைக் கைப்பற்றியது "ஜேர்மனியரே தூய இனம்' என்னும் இனவாதத்தின் பேரால் கிட்லர் 60 இலட்சம் யூதர்களைக் கொன்றொழித்தார்.

ஐரோப்பாவில் சோவியத் சோஷலிச குடியரசு ஒன்றியத்தை ஒழித்து ஏனைய வல்லாதிக்க நாடுகளையும் கட்டி ஆள கிட்லர் யுத்தத்தை தொடங்கினார்.

நாசிச ஜேர்மனியின் தலைவர் கிட்லர், பாஸிச இத்தாலியின் தலைவர் முசோலினி மற்றும் ஜப்பானும் ஓரணியில் நின்றன.

சோவியத் ஒன்றியத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின், பிரித்தானியப் பிரதமர் வின்சன் சேர்ச்சில், ஐக்கிய அமெரிக்க அதிபர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் ஆகியோர் கிட்லருக்கு எதிராக ஒன்றிணைந்தார்கள்.

ஜேர்மன் படைகள் சோவியத் ஒன்றியத்தை ஆக்கிரமித்தபோது ஏறத்தாழ இரண்டு கோடி மக்கள் இறந்தார்கள்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மேற்கு ஜேர்மன் அமெரிக்காவின் ஆளுகைக்குள்ளும் கிழக்கு ஜேர்மன் சோவியத் ஒன்றியத்தின் ஆளுகைக்குள்ளும் வந்தன.

அமெரிக்காவின் குண்டு வீச்சால் ஜப்பானின் நாகசாகி, கிரோசிமா ஆகிய பிரதேசங்கள் பாலைவனமாகின.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட் யுத்தம் நடக்கும் போதே 1942 இல் ஐக்கிய நாடுகள் என்னும் பதத்தை முதன்முதலில் பிரகடனம் செய்தார்.

அதனையடுத்து முப்பெரும் தலைவர்களும் சேர்ந்து 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை உருவாக்கினார்கள். இதன் பிரதான நோக்கங்களாவன:-

1.யுத்தக் கொடுமைகளிலிருந்து எதிர்கால தலைமுறையினைப் பாதுகாத்தல்.

2. அடிப்படை மனித உரிமைகள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தல்.

3. ஆண், பெண் தனித்துவத்தையும் சம உரிமையையும் பேணல்.

4. பெரிய நாடுகள், சிறிய நாடுகள் என்ற வேறுபாடு இல்லாமல் அவற்றின் தனித்துவத்தையும் சம உரிமையையும் பேணல் என்பனவாகும்.

இதன் கட்டமைப்பை நோக்கும்போது ஆறு பிரதான சபைகளைக் கொண்டது.

அவை பொதுச் சபை, பாதுகாப்பு சபை, பொருளாதார சமூக சபை, நீதி மன்றங்களுக்கான சபை, நம்பிக்கைச்சபை, செயலகம் என்றவாறு அமையும்.

இதில் பாதுகாப்புச்சபை பிரதானமானது. இதில் ஐந்து நிரந்தர உறுப்பினர்களும், பத்து நிரந்தர உறுப்பு அல்லாத நாடுகளும் உள்ளன.

1945 இல் 50 நாடுகளை மாத்திரம் உறுப்பினர்களாக கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபை தற்போது 193 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. அத்தோடு இங்கு 85,000 நிர்வாகிகள் பணியாற்றுகின்றார்கள்.

இதன் வருடாந்த செலவீனம் 40 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.

இந்த ஸ்தாபனத்தின் சமூக, பொருளாதார சபை பல முகவர் அமைப்புகளைக் கொண்டுள்ளது.

கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், உலக சுகாதார நிறுவனம், உலக உணவு நிறுவனம், உலக விவசாய ஸ்தாபனம், சர்வதேச நீதிமன்றம், சர்வதேச நாணய நிதியம், அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் போன்றனவாகும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபையில் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் தொகை நான்கு மடங்காக அதிகரித்திருப்பதற்கு 1990 களில் சோவியத் ஒன்றியம் 16 நாடுகளாக சிதறியமை, யுகோஸ்லாவியா 6 நாடுகளாக பிளவுண்டமை, மேலும் பல புதிய நாடுகள் உருவாகியமை காரணமாகும்.

இவ் எழுபதாண்டு காலத்தில் மூன்றாவது உலகமகா யுத்தமொன்று ஆரம்பிக்காத போதிலும் நாடுகளுக்கிடையே நீண்டகாலப் போர்கள், நாடுகளுக்குள்ளே இன, மத ரீதியான உள்நாட்டு யுத்தங்கள் நடந்தே வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக நடைபெற்ற சீன-வியட்நாம் யுத்தம், ஈரான்- ஈராக் யுத்தம், அமெரிக்கா- வியட்நாம் யுத்தம், ஸ்ரேல்- பாலஸ்தீன யுத்தங்களைக் குறிப்பிடலாம்.

இவ் யுத்தங்களை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை சவாலாகவே விளங்கின.

அதன் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகள் இருந்தபோதும் ஐக்கிய நாடுகள் சுதந்திரமாக, சுயாதீனமாக செயற்பட முடியாமல் அதிகார மையங்கள் சார்ந்தே செயற்பட வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் ஏனைய நாடுகள் மீதான நியாயப்படுத்த முடியாத தலையீடுகளை ஐக்கிய நாடுகளால் நிறுத்த முடியாதுள்ளது.

இதற்கு உலகில் நிலவும் இருமுனைப்பட்ட, ஒருமுனைப்பட்ட, பலமுனைப்படுத்தப்பட்ட வல்லாதிக்க முறைமைகள் காரணமாகலாம். அதாவது நடைமுறையில் உள்ள உலக ஒழுங்கு ஐக்கிய நாடுகள் மீது தாக்கத்தை செலுத்துகின்றது.

இன்றும் நடைபெற்று வரும் இஸ்ரேல்- பாலஸ்தீன மோதல்களால் பாதிக்கப்பட்டு முகாம்களில் வாழும் அகதிகளுக்கு இத்தாபனம் தொடர்ந்து உதவுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் தொடரும் கிளர்ச்சிகளால் பாதிக்கப்படும் மக்களுக்கும் இடம் பெயர்ந்து கடல் மார்க்கமாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடையும் மக்களை ஐக்கிய நாடுகள் அகதிகள் சட்டத்தின்படி அந்நாடுகள் பராமரிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் சமாதானப் புறாவாக பொதுச் சபையில் பேசியமை, 28 வருடங்கள் சிறையில் வாடிய தென்னாபிரிக்க விடுதலை இயக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்காக பொதுச் சபையில் குரல்கள் ஒலித்தமை, அமெரிக்கா, கியூபா மீது பொருளாதாரத் தடையை விதித்த போது பிடல் காஸ்ட்ரோ ஆற்றிய உரையும் அதற்கு எதிராக அவர் ஏனைய நாடுகளை அணி திரட்டியமை போன்றவை குறிப்பிட்டு சொல்லக்கூடிய அம்சங்களாகும்.

இன்று உலகில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது. நில நடுக்கம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி, சுனாமி போன்றவற்றால் ஏற்படும் அழிவுகளுக்கு ஐக்கிய நாடுகளின் அனர்த்த முகாமைத்துவ அமைப்பு உதவுகின்றது.

இன்றைய உலகில் வறுமையும் வன்முறைகளுமே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு சவாலாகவுள்ளன. எனவே எதிர்காலத்தில் இச்சபை தனது கொள்கைகளையும் கட்டமைப்புக்களையும் மறுசீரமைப்பு செய்வது அவசியமானதாகும்.

**பி.முத்துலிங்கம்**
**ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்**
**தென்மராட்சி**

சிறிய விடயத்தில் நியாயம் தவறுபவன்
பெரிய விடயத்திலும் தொடர்வான்.
- யேசுநாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சுற்றாடல் சுத்தம் யார் பொறுப்பில்?

டெங்கு நோயின் அபாயம் எங்களைத் துரத்திக் கொண்டே இருக்கிறது. இதனோடு காலத்துக்குக் காலம் எங்களை நோக்கி படை எடுக்கும் தொற்று நோய்கள் இன்னமும் தணிந்தபாடில்லை.

இத்தகையதோர் மோசமான சூழ்நிலையில் டெங்குக் கட்டுப்பாட்டில் எவ்வளவுதான் நடவடிக்கை எடுத்தாலும் டெங்கின் அபாயம் ஏதோ ஒருவகையில் பீறிக் கொள்வதை காணமுடியும்.

டெங்கு காய்ச்சல் எதனால் ஏற்படுகிறது? டெங்கு நுளம்பு பெருகுகின்ற இடங்கள் எவை? இது போன்ற கேள்விகளுக்கு சிறு குழந்தைகள் கூட பதில் அளிக்கும் அளவில் சுகாதாரக் கல்வி சென்றடைந்துள்ளது.

டெங்கு தொடர்பிலான அறிவு தாராளமாக இருக்கின்ற போதிலும் மக்களின் மனப்பாங்கு என்பது இன்னமும் மாற்றமுறாமல் இருப்பதன் காரணமாகவே டெங்குக் காய்ச்சலை இதுவரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை. இதற்கு மேலாக மக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகள், குப்பை கூழங்களை வீதிகளில் வீசி விடுகின்ற பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இதனால் வீதி எங்கும் கழிவு பொட்டலங்கள் காணப்படுவதுடன் தெரு நாய்களும் கால்நடைகளும் அவற்றை துவம்சம் செய்துவிட எங்கள் சுற்றுச் சூழல் என்பது நரகமாகி விடுகிறது.

தமது வீட்டுக் குப்பைகளை வீதிகளில் கொட்டுவது எவ்வளவு அபத்தமானது என்பதைத் தெரிந்திருந்தும் பொறுப்பற்ற முறையில் ஒரு பகுதி மக்கள் நடந்து கொள்வது எந்த வகையிலும் நியாயமாகாது.

வீதிகளில் குப்பைகளைக் கொட்டுவது எதற்காக என்ற ஆய்வை மேற்கொள்ளும் போது, ஐயா! இங்கே குப்பை கொட்டாதீர்கள் என்ற விளம்பரப் பலகைகளை நாட்டுபவர்கள் குப்பைகளை எங்கே கொட்டுவது என்பதையும் அறியப்படுத்த வேண்டுமல்லவா? ஏன் அதனை சம்பந்தப்பட்டவர்கள் செய்யவில்லை என்ற கேள்வி பதிலுக்கு எழுப்பப்படுகிறது.

உண்மையில் வடபுலத்தில் இன்னமும் கழிவகற்றலுக்கான முகாமைத்துவக் கட்டமைப்பு தலை எடுக்கவில்லை என்பதை சொல்லித்தானாக வேண்டும்.

21ஆம் நூற்றாண்டிலும் குப்பைகள் அகற்றப்படவில்லை என்று ஊடகங்களில் செய்தி பிரசுரிக்கும் அளவிலேயே நமது நிலைமை இருப்பது மிகப் பெரும் துரதிர்ஷ்டவசமானது.

குப்பைகளை அகற்றுவதற்காக ஒரு சீரான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவேண்டும்.

வீட்டு வாசலுக்கு முன்பாக குப்பைகளை வையுங்கள். அவை வாகனங்களில் எடுக்கப்படும் என்ற அறிவித்தல் கட்டாக்காலி நாய்களினால் படுதோல்வி கண்டு விட்டது.

எனவே பொருத்தமான கழிவகற்றல் செயற்றிட்டம் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இதுதவிர குப்பைகளை இங்கு கொட்டாதீர்கள் என்பதற்குப் பதிலாக இவ்விடத்தில் குப்பைகளை கொட்டுங்கள் என்ற அறிவிப்புகளை முன்வையுங்கள். அதற்கான இடத்தை தெரிவு செய்யுங்கள்.

இது விடயத்தில் உள்ளூராட்சி அமைப்புகள் அதிக கவனம் செலுத்த வேண்டும். குப்பைகள் அதிகமாக சேருகின்ற இடங்களில் ரைக்டர் பெட்டிகளை நிறுத்தி அவற்றில் குப்பைகளைக் கொட்ட வைப்பது அவற்றை சுலபமாக அகற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

இதேபோல பொருத்தமான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் மழை காலத்தில் வீதிகளில் கொட்டப்படும் கழிவுகளில் தொற்று நோய்கள் எங்கள் மக்களைப் படுத்தாப் பாடுபடுத்தும் என்பது தவிர்க்க முடியாத யதார்த்தம்.

## தமிழகத்தில் பெருவெள்ளம்

# சிக்கி தவிக்கும் எம் உறவுகளுக்கு உதவுவது காலத்தின் கட்டாயம்

### சிறிதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தில் சிக்கித்தவிக்கும் தமிழக மக்களுக்கு உதவும்படி ஈழ மக்கள் சார்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பா. உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம் அனுதாபங்களையும் வெளியிட்டுள்ளார்.

அந்த செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது,

வரலாறு காணாத அளவு பெரு மழையால் எமது தொப்பூள் கொடி உறவுகள் தமிழகத்தில் பெரு வெள்ளத்தில் இலட்சக்கணக்கில் சிக்கித் தவிப்பது கண்டு ஈழ மக்கள் இதயம் வருந்துகின்றனர்.

எப்பொழுதும் ஈழ மக்களின் இதயங்களில் குடியிருக்கும் தாய்த் தமிழக மக்களை பெருமளவில் பெருமழை துயர்படுத்தியுள்ளது. அழகிய தமிழகம் வெள்ளக்காடாய் மாறியிருக்கின்றது.

சகல அத்தியாவசிய தேவைகளையும் நிறைவேற்ற முடியாத அளவுக்கு பெருமழை தமிழக மக்களின் வாழ்வில் பெரும் இடரை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டு சொத்துக்களை இழந்து மழையில் தவிக்கும் உறவுகளின் துயரில் நாமும் எமது ஈழ மக்கள் சார்பில் பங்கெடுக்கின்றோம்.

வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையாரின் அனர்த்த முகாமைத்துவம் சிறப்புற நடைபெற்று தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மீண்டும் மகிழ்வுடன் அமைய வேண்டுமென் நாம் பிரார்த்திக்கின்றோம்.

இதேவேளை ஈழ மக்கள் துன்புறும் வேளைகளில் எல்லாம் கண்ணீர் சிந்தி எம் காப்பரணாய் மாறத்துடிக்கும் தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ புலம் பெயர் ஈழ மக்களையும் உலகமெலாம் வாழும் தமிழ் உறவுகளையும் மனிதாபிமானம் உள்ள மக்களையும் உதவும்படி நாம் அழைப்பு விடுகின்றோம்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையாரின் வெள்ள நிவாரண மையத்துக்கு உங்கள் உதவிகளை வழங்குவதன் மூலம் தமிழக மக்களின் இந்த துயர் நிலையில் கைகொடுக்கலாம்.

புலம்பெயர் ஈழ தமிழ் உறவுகள் மற்றும் உலகமெலாம் வாழும் தமிழுறவுகள் மனிதாபிமானம் உள்ள உறவுகள் இந்திய நாடளுமன்ற உறுப்பினர் இரவி பேணாட்டுடன் கீழ் வரும் தொலைபேசி இலக்கம் 00919940 695552 ஊடாக தொடர்பு கொண்டு உங்கள் கருணையுள்ளத்தின் கொடைகளை வழங்க முடியுமென அன்புடன் அறியத்தருகின்றேன் என சிறிதரன் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஒளிவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலையின் ஒறேற்றர் மண்டபத்தில் முற்பகல 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் வ.நந்தீஸ்வரன் தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக டேவிட் பத்மநாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக திருமதி அமிர்தாபத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது கலைநிகழ்வுகள் மற்றும் சிறுவர் அரங்கில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசில் வழங்குதல் என்பன நடைபெறவுள்ளன. (இ-5)

## கௌரவிப்பு நிகழ்வு

( யாழ்ப்பாணம் )

யாழ் கோப்பாய் மகா வித்தியாலய கரப்பந்தாட்ட அணியினரைக் கௌரவித்தல் நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு அதிபர் த. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. ( இ-5 )

## 5 லீற்றர் கசிப்பு மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டதாக கூறப்பட்ட 5 லீற்றர் கசிப்பு நெல்லியடி பொலிஸாரினால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வயோதிபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

புதன்கிழமை காலையில் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் கசிப்பினை வைத்திருந்தவரும் கைது செய்யப்பட்டார். (இ-5-60)




### முதியோருக்கு மரியாதை

★ மனதை அடக்கியாண்டு மறுமைக்குப் பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி. மனம் போன போக்கில் நடந்து, இறைவன் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்.

★ நாவு நேர்மையாக இருக்குமானால், இதயம் நேர்மையான வழியில் செல்ல வேண்டும். நேர்மையற்றதாக இருக்குமானால் இதயம் நேர்மையான வழியில் செல்ல முடியாது.

★ ஒரு காரியத்தை நீர் செய்ய விரும்பினால் அதன் முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நல்லதாக இருந்தால் அதைச் செய்வீர். இல்லையேல் அதை விட்டு விடும்.

★ உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு.

★ பெருமை என்பது உண்மையை ஏற்க மறுப்பதும், மனிதர்களை இழிவாகக் கருதுவதும் ஆகும்.

★ ஒருவன், முதியவருக்கு அவருடைய வயதிற்காக மரியாதை செய்தால், வயோதிக நிலையில் அவனுக்கு மரியாதை செய்வோரை இறைவன் ஏற்படுத்துகிறான்.

JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2014
நலிவுற்ற பெண்களாய் நாடி ஒடுங்கிடாமல் நாம்
நிமிர்ந்தே படைத்திடுவோம் நல்ல பல செயற்றிட்டங்கள்



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அறிவுரை! ஹவாயிலிருந்து

தெய்வத்திற்கு எம்மாதிரியான நேரத்தை நீங்கள் கொடுக்கிறீர்கள்?

சாதாரணமாக எல்லாம் போக மிஞ்சுகிற நேரத்தை வழங்குகிறீர்கள். செய்வதற்கு ஏதும் இல்லாதபோது, விருந்தாளிகள் வராத போது, செல்வதற்கு விருந்து நிகழ்ச்சிகள் இல்லாதபோது, பார்ப்பதற்கு நல்ல திரைப்படங்கள் இல்லாதபோது, போவதற்குத் திருமணங்கள் இல்லாதபோது இத்தகைய நேரத்தைத்தான் கொடுக்கிறீர்கள். இது ஒரு தரமான நேரம் அல்லவே.

தெய்வத்திற்கு நல்ல தரமான நேரத்தை ஒதுக்குங்கள். அதனால் உங்களுக்கு நன்மை கிடைக்கும். உங்கள் பிரார்த்தனைகளுக்கு விடை கிடைக்கவில்லையானால் நீங்கள் ஒருபோதும் தரமான நேரத்தைக் கொடுக்கவில்லை என்றே அர்த்தம். **சத்சங்கத்திற்கும் தியானத்திற்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுங்கள்.**

**தெய்வத்திற்கு மிகச்சிறந்த நேரத்தைக் கொடுங்கள். உங்களுக்குப் பலன் கிடைக்கும்.**

புதிர்: அதிக தாராளமாகக் கொடுக்கப்படுவது, ஆயினும் எடுத்துக் கொள்ளப்படாதது எது,

1. பாராட்டுக்கள் (...இல்லை)


2. குற்றச்சாட்டுக்கள் (... இல்லை, குற்றச்சாட்டுக்களை மக்கள் எடுத்துக்கொள்கிறார்கள்)


3.பணம்? (... இல்லை, பணம் உடனே எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் தாராளமாகக் கொடுக்கப்படுவதில்லை)

4.மகிழ்ச்சி ? (... மகிழ்ச்சியை யாராலும் கொடுக்க முடியாது)

5.??

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து: அரையிறுதியில் நார்த் ஈஸ்ட்




இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் யுனைடெட் நார்த் ஈஸ்ட் அணி புனேவை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஐ.எஸ்.எல். என்று அழைக்கப்படும் இந்தியன் சுப்பர் 'லீக்' காற்பந்து போட்டி தற்போது விறுவிறுப்பான கட்டத்தில் உள்ளது.

8 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் நடப்பு சம்பியன் அட்லெடிகோ கொல்கத்தா, எப்.சி. கோவா, டெல்லி டைனமோஸ் ஆகிய 3 அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றுவிட்டன.

அரையிறுதியில் நுழையப் போகும் 4 ஆவது அணி எது? என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. கேரளா பிளாஸ்டர்ஸ் வாய்ப்பை இழந்துவிட்டது. அரை இறுதியில் எஞ்சிய ஒரு இடத்தை பிடிக்க கவுகாத்தி, சென்னை, புனே அணிகள் இடையே கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில், யுனைடெட் நார்த் ஈஸ்ட் மற்றும் புனே எப்ஃசி அணிகளுக்கு இடையிலான போட்டி நேற்று கவுகாத்தி இந்திராகாந்தி மைதானத்தில் நடைபெற்றது.

நார்த் ஈஸ்ட் அணியின் நிக்கோலஸ் ஆட்டம் தொடங்கிய 4 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார். இதனையடுத்து 6-வது நிமிடத்தில் புனே அணியின் ஜேம்ஸ் பெய்லி கோல் அடித்தார்.

பின்னர் நார்த் ஈஸ்ட் அணியின் கமரா 18 ஆவது நிமிடத்திலும், ஆண்ட்ரி முட்டு மற்றும் அட்ரியன் பைக்கி கோல் அடித்தனர். இறுதியில் புனே அணியின் ஆண்டிரியன் முட்டு 86 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். இதன்மூலம் நார்த் ஈஸ்ட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் நார்த் ஈஸ்ட் அணி தனது அரையிறுதி வாய்ப்பை இழந்தது. (க)

## இலங்கை அணிக்கு எதிரான நியூசிலாந்து அணி அறிவிப்பு




இலங்கை கிரிக்கெட் அணியுடன் நடை பெறவுள்ள டெஸ்ட் போட்டிக்காக நியூசிலாந்து அணியின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணியின் பிரண்டன் மெக்கல்லம் தலைமையிலான 12 பேர் கொண்ட அணி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கடந்த போட்டிகளில் திறமையை வெளிக்காட்டாத அனுபவம் வாய்ந்த வீரர்களான மார்டின் கப்டில் மற்றும் மார்க் க்ரேக் ஆகியோர் தொடர்ந்தும் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி இம்மாதம் 10ஆம் திகதி டனோடீன்னில் ஆரம்பமாகவுள்ளது. (க)

## பொய்யான வயதை பயன்படுத்தல் மோசடிக்கு சமமானதாகும்

### ராகுல் ட்ராவிட்



கனிஷ்ட வயதினருக்கான கிரிக்கெட் போட்டிகளில், வயதை மறைத்துப், பொய்யான வயதைப் பயன்படுத்தல், போட்டி நிர்ணயம் (பிக்சிங்), ஊழல் போன்றவற்றிலிருந்து வேறானவை அல்லவென, இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்திய முன்னாள் தலைவர் எம்.ஏ.கே பட்டோடி ஞாபகார்த்த வருடாந்த உரையில், இம்முறை உரையாற்றும் போதே ட்ராவிட், இவ்வாறு குறிப்பிட்டார்.


"தனது வயதை மறைத்து, போலி பிறப்புச் சான்றிதழைத் தனது பெற்றோரும் பயிற்றுநர்களும் தயாரிப்பதைப் பார்க்கும் குழந்தையொன்று, எதிர்காலத்தில் ஏமாற்றுவதைப் பற்றி நினைக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என, ட்ராவிட் கேள்வியெழுப்பினார்.

"பொய் சொல்வதற்கு அவன், தனது பெரியோர்களாலேயே பயிற்றுவிக் கப்படுகிறான்" எனத் தெரிவித்த அவர், "14 வயதில் அது, வெறுமனே வயது எல்லையாக இருக்கலாம், 25 வயதில் அது போட்டி நிர்ணயம், ஊழலாக இருக்கலாம். இரண்டுமே, எந்த வகையில் வித்தியாசமானவை? இரண்டு இடங்களிலும், மோசமான ஏமாற்றுக்களில்லையா?" எனக் கேள்வியெழுப்பினார்.

வயது கூடிய வீரர்கள், குறைந்த வயதுடைய எல்லையில்விளையாடுவதால் போட்டிகளின் போட்டித் தன்மை பாதிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், அதை விட முக்கியமானதாக, அந்த வயதுப் பிரிவுக்குரிய பொருத்தமான வீரர்கள், போட்டிகளில் விளையாட முடியாது போவதாகத் தெரிவித்தார்.

வயது அதிகமான வீரர்களை, குற்றமிழைத் தவர்களென அழைத்த அவர், அவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார். (க)

## இங்கிலாந்து லீக் கிண்ணத்துக்கான காற்பந்தாட்டச் சுற்றுத் தொடர்




இங்கிலாந்தின் லீக் கிண்ணக் காற்பந்து தொடரான கப்பிற்றல் வண் கிண் ணத்துக்கான காலிறுதிப் போட்டிகளில், மன்செஸ்டர் சிற்றி, எவேர்ட்டன், ஸ்டோக் சிற்றி அணிகள் வெற்றிபெற்றுள்ளன. இதில், 43 வருடங்களின் பின்னர், இத் தொடரின் அரையிறுதிக்கு, ஸ்டோக் சிற்றி அணி தகுதி பெற்றுள்ளது.

மன்செஸ்டர் சிற்றி அணிக்கும் ஹள் சிற்றி அணிக்குமிடையிலான போட்டியில் மன்செஸ்டர் சிற்றி அணி, 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் சிற்றி சார்பாக 12ஆவது நிமிடத்தில் வில்பிரட் போனி, 80ஆவது நிமிடத்தில் கெலெச்சி இஹெனாச்சோ, 82, 97ஆவது நிமிடங்களில் கெவின் டி பிரைன், ஆகியோர் கோல்களைப் பெற்றனர். 90ஆவது நிமிடத்தில் ஹள் சிற்றியின் அன்ட்ரூ றொபேர்ட்ஸன் பெற்றுக் கொடுத்தார்.

எவேர்ட்டன் அணிக்கும் மிடில்புரோ அணிக்குமி டையிலான போட்டியில் எவேர்ட்டன் அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 20ஆவது நிமிடத்தில் ஜெரார்ட் டுலொபெ, 28 ஆவது நிமிடத்தில் றொமேலு லூகாகு ஆகியோர் கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

ஸ்டோக் சிற்றி அணிக்கும் ஷெபீல்ட் வெனிஸ்டே அணிக்குமிடையிலான போட்டியில் ஸ்டோக் சிற்றி அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

30ஆவது நிமிடத்தில் இப்ராஹிம் அபெலே 75 ஆவது நிமிடத்தில் பில் பார்ட்ஸ்லே ஆகியோர் கோல்களை பெற்று அவ்வணிக்கு வெற்றியை பெற்றுக்கொடுத்தனர். (க)

## டையமன்ஸை வீழ்த்தியது கம்பர்மலை யங்கம்பன்ஸ்





கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுப்பர் 8 அணிகள் மோதும் மாபெரும் உதைபந்தாட்ட லீக் சுற்றுத் தொடரில் டையமன்ஸ் அணியை எதிர்கொண்ட கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் 4:1 என்ற இலகுவான வெற்றியை பெற்றது. அணி சார்பாக பிரகாஷ் 2 , தர்சன் 1, நிறோஜன 1 கோல்களையும் போட்டு ஆட்டத்தை சிறப்பித்தார்கள். (க)

# மண்டைதீவு...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சந்தர்ப்பத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மண்டைத்தீவு, அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளில் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி முதல் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் இளைஞர்கள் அழைத்து செல்லப்பட்டிருந்தனர்.

குறித்த பகுதிகளிலிருந்து சுமார் 150 இளைஞர்கள் வரை அழைத்து செல்லப்பட்டிருந்ததாகவும், அவர்களில் 70 பேர் வரை காணாமல் போயுள்ளதாகவும் பாராளுமன்றத்தில் சி.சிறிதரன் நினைவூட்டினார்.

இந்த விடயம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்ட அவர், காணாமல் போனோர் விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவேதான் இந்த விடயங்களை பாராளுமன்ற முன்னிலைக்கு கொண்டு வந்ததாக சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்வாறு காணாமல் போனோரின் சடலங்கள் மண்டைத்தீவு செம்மன்தீவு கிணறுகளிலும், மண்டைத்தீவு கிறிஸ்தவ தேவாலய வளாகத்திலும் புதைக்கப்பட்டுள்ளதாக தான் சந்தேகிக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பாராளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார்.

இதன்பிரகாரம், குறித்த பகுதி விரைவில் அகழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த பகுதிகள் இராணுவத்தினரால் கொங்கிறீட் இடப்பட்டு மறைக்கப்பட்டுள்ளமையின், ஊடாக இந்த சடலங்கள் இந்த பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ளமை உறுதியாவதாக அவர் சுட்டிக்காட்டினார். (செ-12)

# டெங்கு காய்ச்சல்...

மாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வருடத்தில் இதுவரை இந்நான்கு தொற்று நோய்களினால் ஆயிரத்து 734 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் டெங்கு காய்ச்சலினால் ஆயிரத்து 15 பேரும், வயிற்றோட்டத்தினால் 350 பேரும், எலிக்காய்ச்சலினால் 21பேரும், உண்ணிக் காய்ச்சலினால் 348 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு காய்ச்சல் டெங்கு நுளம்பினாலும், வயிற்றோட்டம் சுட்டாறிய தண்ணீரினை பருகாமையாலும், எலிக்காய்ச்சல் அதிகமாக வயல்களில் வேலை செய்பவர்களில் எலியின் மலம் அல்லது கழிவுகளில் உள்ள கிருமிகள் உட்செல்வதாலும், உண்ணிக்காய்ச்சல் நாய் போன்ற வளர்ப்பு மிருகங்களில் காணப்படும் உண்ணிகளாலும் பரப்பப்படுகின்றது.

டெங்கு காய்ச்சல் யாழில் குருநகர் பகுதியிலேயே அதிகமாகவும், வயிற்றோட்டம் யாழ்.மாவட் டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் பரவலாகவும், எலிக்காய்ச்சல் வயல் வேலை செய்யுமிடங்களிலும், உண்ணிக் காய்ச்சல் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தெல்லிப்பளை, கோப்பாய் ஆகிய இடங்களிலும் அதிகமாக பரவுகின்றது.

இந்நான்கு தொற்று நோய்களிலும் டெங்கு மற்றும் வயிற்றோட்டம் ஆகியன விரைவாக பரவிவருகின்றன. இதனால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் சடுதியாக கடந்த மாதங்களிலும் பார்க்க அதிகரித்து வருகின்றது. இதில் டெங்கு நோயினாலும் எலிக்காய்ச்சலினாலும் இரு வேறு உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நோய்கள் அனைத்தினதும் முழுமையான தாக்கம் அடுத்த வருட முற் பகுதியிலேயே தென்பட வாய்ப்புக்கள் உள்ளன. குறிப்பாக டெங்கு நுளம்பின் பெருக்கம் தற்போது ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன. இதற்கு தொடர்ச்சியான மழையே காரணம். இம்மாதம் முழுவதும் மழை பெய்து ஓய்ந்ததும் அடுத்த மாதம் முழுவதும் தேங்கி இருக்கும் நீர்களில் டெங்கு நுளம்பின் பெருக்கம் பல் மடங்காக அதிகரிக்கும்.

இதனால் நோயாளர்களின் எண்ணிக்கையும் பல மடங்காகும், ஒவ்வொரு வருடமும் இதுவே நடைபெறுகின்றது. இந்த நவம்பர் மாதத்தில் 192 பேரே டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள போதிலும் கடந்த ஜனவரி மாதத்தில் 348 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு உள்ளனர். ஆகவே வருடத்தின் இறுதி பகுதியிலும் பார்க்க முற் பகுதியில் டெங்கின் தீவிரம் அதிகரிக்கின்றது.

இதனை இம்மாதத்தில் இயலுமான வரையில் கட்டுப்படுத்தா விட்டால் தை மாதத்தில் இதன் தாக்கத்தை யாழ்ப்பாணத்தில் மாத்திரம் பலநூற்றுக் கணக்கானவர்கள் உணர வேண்டி வரலாம். குறிப்பாக டெங்கு நுளம்புகள் வயல்கள், குளங்களில் பெருக்குவதிலும் பார்க்க, நன்னீர் தேங்கும் சில்வர், போத்தல்கள், சிரட்டை, வீட்டு கூரை, மற்றும் அலங்கார சாடிகள் போன்ற இடங்களிலேயே அதிகளவில் பரவுகின்றன.

இவற்றை ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் இனம் கண்டு அழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சலில் இருந்து ஓரளவிற்கு விடுபட முடியும் என வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர். (செ-4)

# யாழ்.கிளி...

நேற்றையதினம் வழங்கியுள்ளார்.

இதன்படி இனிவரும் காலத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக் கான அபிவிருத்தி மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக கூட்டங்கள் இவரது தலைமையிலேயே இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# எம் வருங்காலத்தை...

வேண்டும் என்ற சில்லறைத்தனத்தில் இருந்து நாம் விடுபட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணக் கண்காட்சி நேற்றைய தினம் யாழ் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

அதில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் கீழ் இன்று பல கிராமங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் குறிப்பாக மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது செயற்பாடுகளை மிகவும் முனைப்புடன் ஆற்றி வருவது பாராட்டுதற்குரியது.

கடந்தகால கொடிய யுத்தத்தின் பின்னர் பல குடும்பங்களில் பெண்கள் தமது கணவன், பிள்ளைகள், பெற்றோர்களை இழந்து நிர்க்கதியாகி நின்ற நிலையில், பொருள் தேடலில் ஈடுபடக்கூடிய தந்தை, கணவன், ஆண் பிள்ளைகள் அற்ற நிலையில், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு வாழக்கூடிய பல குடும்பங்களுக்கு இவ்வாறான அமைப்புக்கள் உதவுங்கரங்களாக வாழ்க்கைக்கு ஒளியூட்டக்கூடிய அமைப்புக்களாக விளங்கிவந்துள்ளன.

ஆண்களோ பெண்களோ கல்வி கற்றல் செயற்பாடுகளை ஓரளவு சிறப்பாக அல்லது அதிலும் குறைவாக நிறைவு செய்த பின்னர் எம்மிடம் வரும் போது சுயதொழில் பற்றி பேசிப்பார்கின்றோம். ஆனால் அவர்கள் அதைச் செவிமடுப்பதாகத் தெரியவில்லை.

எமது முன்னோர்கள் மிகக்குறைந்த வருவாயுடன் எவ்வித மேலதிக வருமானங்களும் இன்றி தமது வாழ்க்கை முறைமையை அழகாக அமைத்துக் கொண்டார்கள்.

ஆனால் இன்றோ நாம் ஆண், பெண், குழந்தை, குட்டி என்று அனைவரும் ஓடி ஓடி உழைத்தும் எமது வருமானங்கள் போதுமானதாக அமைவதில்லை. காரணம் வீண் விரயங்கள். அதிக மின் பாவனை, ஆடம்பரச் செலவுகள், தேவையற்ற கொண்டாட்டங்கள் என பல வழிகளில் அனாவசியச் செலவீனங்களைத் தேடிக் கொண்டு அல்லல் படுகின்றோம்.

வீண் பொழுதைக் களிப்பதிலும் வெட்டிப் பேச்சுப் பேசுவதிலும் இருந்து எம்மை விலக்கிக் கொண்டு நாட்டுக்கு நன்மை தரும் நடவடிக்கைகளில் ஈடுபட முன்வர வேண்டும் என்று கருதுகின்றேன்.

பயன்தரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதே எமது பலனற்ற பேச்சுக்களுக்கும் சோம்பறித்தனத்திற்குந் தக்க மருந்து. எமது திணைக்களங்களில் கூட எமது அலுவலர்கள் வெட்டிப் பேச்சுக்களிலேயே ஈடுபட்டு கடமைகளைப் புரிவதில் கோட்டை விடுகின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். எமது மக்கள் கடமை தவறாத சீலர்களாக மாற முன்வர வேண்டும். பயன் தரும் நடவடிக்கைகளில் ஈடுபட யாவரும் முன்வாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

# 4 பசுக்கள்...

லீடுபடும் போக்குவரத்து வீதியில் நேற்று காலை சுமார் பத்திற்கு மேற்பட்ட மாடுகள் படுத்திருந்துள்ளன. குறித்த வீதி எவ்வித வளைவுகளும் இல்லாது நேராக காணப்பட்ட போதிலும் வீதியில் படுத்திருந்த பசு மாடுகளை கவனிக்காத சாரதி அவற்றின் மீது பேருந்தை ஏற்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

பசு மாடுகள் மீது பேருந்தை ஏற்றி அவை உயிரிழக்க காரணமான சாரதி பேருந்தை நிறுத்தாமல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

உயிரிழந்த பசு மாடுகள் நேற்று மதியம் வரை புதைக்கப்படாமல் அவ்விடத்திலேயே காணப்பட்டன. மேலும் பசுக்கள் மீது பேருந்தின் சக்கரங்கள் ஏறியமையால் குடல்கள் வெளித் தள்ளி அகோர மாக காணப்பட்டன. (செ-4)

# தகவல் உரிமை...

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இச்சட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலையே காணப்பட்டது.

இந்நிலையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு தற்போது அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில், விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

# இலஞ்சம்; ஊழல்...

இன்று வெள்ளிக்கிழமை இலஞ்ச ஊழல் எதிர்ப்பு தினமாகும். இதனை முன்னிட்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலஞ்சம் வாங்குவதால் அல்லது கொடுப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தல்கள் இடம்பெற உள்ளது.

மேலும் இலஞ்ச ஊழல் தொடர்பான விழிப்புணர்வை அனைத்து மக்களிடமும் ஏற்படுத்தும் வகையில் வாகனங்களுக்கு இவை தொடர்பிலான விழிப்புணர்வு வாசகங்களடங்கிய ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

இதன் போது மக்கள் மத்தியில் இலஞ்ச ஆணைக்குழுவில் எவ்வாறு முறைப்பாட்டினை மேற்கொள்ளல் போன்றவை தொடர்பிலும் விளக்கமளிக்கப்படவுள்ளன.

இன்று காலை பத்து மணியளவில் யாழ். மத்திய பேருந்து தரிப்பிடம் முன்பாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முக்கியஸ்தர்களாக இலஞ்ச ஊழல் எதிர்ப்பு குழுவின் ஆணையாளர் நாயகம் டயஸ் விக்கிரமசிங்க, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

# கோத்தாவின் மனு...

மூலம் ஒன்றை வழங்குவதற்கு கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று மீண்டும் ஆஜராகியிருந்தார்.

இதன் போதே மனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனுவை நிராகரித்த ஆணைகுழு அது தொடர்பாக 22 பக்கங்கள் கொண்ட தீர்ப்பினையும் வழங்கியிருந்தது.

இதேவேளை தம் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அதிகாரமும் கிடையாது என தெரிவித்து முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# வாகன விபத்தில் மூவர் காயம்

(கரணவாய்)

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் வல்லைவெளி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கிருஸ்ணகுமார் உதயன் (வயது 46), பிப்ரின் சுயந்தன் (வயது 19), கந்தசாமி சத்தியகுமார் (வயது 27) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,60)

# ஐ.நா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அலுவலகத்திற்கு முன்பாக மனித உரிமை ஆர்வலர்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை பணிப்பெண் ஒருவருக்கு சவுதி அரேபிய அரசாங்கத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த தண்டனையை உடனடியாக இரத்து செய்யவேண்டும் என கோரியும், தண்டனைக்கு ஆளாகியுள்ள பெண்ணை மீட்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (செ-11)

# சென்னை...

உத்தியோக பூர்வ டுவிட்டர் வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை ஜனாதிபதியின் சென்னை வெள்ளப்பெருக்கு தொடர்பான கரிசனை மற்றும் ஆதரவுக்கு நன்றி தெரிவிப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தன்னுடைய உத்தியோகபூர்வ டுவிட்டர் வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாட்களான தமிழகத்தின் தலைநகர் சென்னையில் பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் அங்குள்ள மக்களுடை இயல்பு வாழ்க்கை மிகமோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

இதுவரையும் சுமார் 300க்கும் அதிகமானவர்கள் இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி மரணமடைந்துள்ளதாக சென்னை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 10 அடிகள் வரையும் சில இடங்களில் வெள்ளம் தேங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதோடு ஏராளமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அதேவேளை தொடர்ந்தும் பல இடங்களில் மக்கள் வெள்ள நீருக்குள் அகப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

# பரீட்சை எழுதும்...

கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்குள் அமைக்கப்படவுள்ள விசேட பரீட்சை நிலையத்தில் இவர்களுக்கான பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாகவும் சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது. (செ-12)

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்

## றோயல் அக்கடமி

அரசடி வீதி, யாழ்ப்பாணம். | நாவலர் வீதி, நல்லூர்.

**தரம் 6 முதல் O/L வரை** (2662)

தமிழ் & ஆங்கில மொழிமூல வகுப்புகள்

ஆரம்பம்
06.12.2015
ஞாயிற்றுக்கிழமை

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு விசேட ஊக்குவிப்புக்கள் உண்டு

தொடர்புகளுக்கு : 0776649134

யாழ்நகர் 07.30 a.m | நல்லூர் 10.30 a.m



## Wanted

**Chinese to English / Tamil Translator**

We need a Chinese to English/Tamil Translator at our paper factory in Atchuvely Industrial Estate -Jaffna. Interested candidates please forward your CV to noble_ipl@yahoo.com. Closing date for the applications 10th of December 2015.
For more details please contact the following numbers in between 9 am to 4pm.
1. 021-221-3000 2. 077-698-0569 (C-2871)



## அகரம் கல்வி நிலையம்

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
2015.12.06 ஞாயிற்றுக்கிழமை அன்று

தரம் 09,10,11 காலை 6.30 மணிக்கும் | தரம் 06, 07, 08 மாலை 2.00 மணிக்கும்

கொக்குவில், மல்லாகம் ஆகிய இரு நிலையங்களிலும் தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்

கொக்குவில், K.K.S வீதி, சம்பியன் சந்தியருகில்

மல்லாகம், K.K.S வீதி, காங்கேயன் வெதுப்பகத்திற்கு முன்னால்

(2638)



## விக்னேஸ்வரா கல்வி நிலையம்

இல 109, பொற்பதி வீதி,கொக்குவில் கிழக்கு.

**புதிய கல்வியாண்டு 2016**

தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்கள் அனைத்தும் எதிர்வரும் 05.12.2015 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கல்விச் சேவையில் நீண்டகால அனுபவம் கொண்ட யாழ்நகரின் முன்னணி ஆசிரியர்களுடன் பல தசாப்த கால கல்விப் பணியில்...

சித்தி என்பது எம் நோக்கமல்ல
திறமைச் சித்திகளே எம் நோக்கம் (C-2859)



"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமதே ஸ்ரீ பகவதே நமஹ"

தரம் 6 முதல் O/L ற்கு | யாழ் நகரின் NO : 1

## எடிசன் அக்கடமி

INTENT + EFFORT + GRACE = SUCCESS

யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | சுன்னாகம்

புதிய கல்வி ஆண்டு 2016

**தரம் 6 முதல் O/L வரை**

English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்

ஆரம்பம் 06.12.2015 (ஞாயிற்றுக்கிழமை)

- யாழ் எடிசன் காலை 8.00 மணி
- கலட்டி எடிசன் மு.ப. 11.00 மணி
- நல்லூர் எடிசன் பி.ப. 12.30 மணி
- கொக்குவில் எடிசன் பி.ப. 2.30 மணி
- சுன்னாகம் எடிசன் பி.ப. 4.30 மணி

எங்களின் சாதனைகள்

- 1999 முதல் 16 வருடங்களாக அதிகூடிய 9A
- இன்றுவரை 170 பேர் 9A
- 3 தடவை தேசிய ரீதியில் முன்னிலை
- 7 தடவை மாவட்டத்தில் முதலிடம்
- 7 தடவை International Olympiad சாதனை

2013 - 16 பேர் 9A / 2012 - 12 பேர் 9A / 2011 - 19 பேர் 9A / 2010 - 11 பேர் 9A

O/L - 2014 எமது மாணவர்கள் 30 பேருக்கு 9A

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள்!!

தரம் 6ற்கு 3 மாதங்கள் இலவசக் கல்வி Contact: 077 77 37 926 (C-2875)



## ஐடியல் அக்கடமி

சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.
681/B, K.K.S வீதி, யாழ்நகர்
(புதிய கரிகணன் பிறிண்டேர்ஸ் பின்புறம்)

**தரம் 6 முதல் O/L வரை**

**கல்வியாண்டு 2016**

ஆரம்பம் : 07.12.2015 திங்கள்
சண்டிலிப்பாய் - 9.30 AM
யாழ்நகர் - 12.30 PM
(C-2877)



"கல்வியுலகின் கலங்கரை விளக்கு"

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி | யாழ்ப்பாணம்

தமிழ் & ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
தரம் 6 முதல் தரம் 11 வரை

'வெற்றிக்கு வித்து' ஆரம்ப கல்விப் பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
6- 12 -2015
ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணி
(C-2874)

புதிய அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படுகின்றன.





"உங்கள் ஆரோக்கியமே எங்களின் மூலதனம்"

தென்னிந்திய உணவு வகைகள்
எமது யாழ் சுவையுடன் சுவைத்து மகிழ்ந்திடலாம்

- இட்லி,
- சப்பாத்தி,
- பூரி,
- பரோட்டா,
- இடியப்பம்,
- குறிஞ்சா ரொட்டி
- தோசை வகைகள்
- பிரியாணி,
- பிறைற் றைஸ்,
- கொத்து
- ஆட்டா கொத்து,
- பன்னீர் காளான் கொத்து

Sylo
ஐஸ்கிறீம் & சைவ உணவகம்

நிறைந்த சுவை, குறைந்த விலை உயர் தொழில் நுட்ப இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட சமைக்க தயாரான உணவுகளும் (Ready to Cook)கிடைக்கும்.

இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 221 7885 (2633)



**GROUP CLASSES SCIENCE**

By :
Mr.RAGUMAR
Gr : 6 - 11
(English / Tamil Medium)
077 605 9650
(2611)



## உயர்தர கலைப்பரிவு, கலை முதல் தேர்வு மாணவர்களே! உங்களுக்கு ஒரு நற்செய்தி

உங்கள் பரீட்சைக்கு அவசியமான பல கற்றல் குறிப்புக்களுடன் (சிரேஷ்ட ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கிடைப்பதற்கரிய விடயங்களுடன்) உங்கள் கட்டுரை எழுதும் திறன், கவிதை எழுதும்திறன், விவாத அறிவுவிருத்தி, சிறுகதை எழுதும் திறன், சொல்லறிவு விருத்திக்கானதிறன் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் (மேலும் பல அறிவியல் விடயங்களுடன்) மார்கழி மாதம் முதல் **ஒளி அரசி** வெளிவருகின்றது.

உங்கள் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் வெளிவரும் அரசியல், பாலியல் கலவையற்ற இந்த மாத சஞ்சிகையை சகல பத்திரிகை முகவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு தடவை வாங்கிப்படித்தால் இதன் பயனை அறிந்து நீங்களே வியப் படைவீர்கள்.

**பிரதிகளை பெற்றுக்கொள்ள :**

வடக்கு : 077 - 6569 617 / 071 - 8628 369, கிழக்கு : 071 - 8724 057, வவுனியா : 077 - 2772 726, மலையகம் : 071 - 87240 56, ஏனையமாவட்டங்கள் : 071 - 4114 990
(C-2876)



A/L 2016 Day Classes

## பௌதிகவியல் R.குகன்

கடந்தகால, மாதிரி வினா-விடை வகுப்புக்கள்
(திங்கள் - வெள்ளி)
பிரிவு I :- 9.30 - 11.30
பிரிவு II :- 11.45 - 1.30

**MECHANICS, HEAT**

ஆரம்பம் - 07.12.2015 திங்கள்

Short note Classes
திங்கள், செவ்வாய், வியாழன் 1.30 - 2.30


Theory Classes- சடப்பொருளியல்
சனி, ஞாயிறு 3.30 - 5.30
ஆரம்பம்:- 05.12.2015 சனி

NEW SCIENCE WORLD VICTORY MUST Brown Road, Jaffna.

NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction. Jaffna.
(C-2866)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி திருக்குமரன் பவதாரணி**



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் திருக்குமரன் ஸ்ரீமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி பவதாரணி 2015-ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் இன்னும் பல கலைகளில் சிறந்து விளங்க இறைவனை வேண்டுகின்றோம்

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, நல்லூர்.

வாழ்த்துவோர் (2661)
அப்பா, அம்மா, அண்ணா,
அப்பப்பா குடும்பம், அம்மம்மா குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.